பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 30 | திங்கட்கிழமை | (14.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 207

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# அரசின் புலனாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றும் அமெரிக்கப் பிரஜை

## பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராகவுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மெரில் குணவர்த்தன தலைமையில் இயங்கும் புலனாய்வுக் குழுக் கூட்டங்களில் அமெரிக்கப் பிரஜை ஒருவர் பங்கேற்றுவருவது பற்றித் தெரியவந்துள்ளது. இலங்கையின் புலனாய்வு அமைப்புக்களின் தலைவர்கள் பங்கு பற்றும் இக் கூட்டங்களில் இந்த அமெரிக்கர் தொடர்ச்சியாகப் பங்கு பற்றி வருவது பற்றி பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு அமைப்புக்கள் அனைத்தும் மிக இரகசியமான புலனாய்வுத் தகவல்களை தமக்குள் பரஸ்பரம் ஆய்வு செய்து முடிவுகளை மேற்கொள்ளும் இந்தக் கூட்டங்களில், வெளிநாட்டவரொருவர் நேரில் பங்கு பற்றுவது வரலாற்றில் இதுவே முதற்தடவை என்றும் புலனாய்வுப் பணியகவட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த(உ/த)பெறுபேறு அடுத்த மாதத்தில்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் 2-வது வாரத்தில் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்று ஆரமபமாகி எதிர்வரும் 20-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-5)

## ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஜனாதிபதி தயக்கம்

# ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி.கூட்டு

# எந்நேரமும் குலையலாம்!

## ஜனாதிபதி தலைமையில் இன்று ஆராய்வு

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி.கூட்டுத்தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த போதும்,ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தயக்கம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகளினது அதிருப்திக்கும்,ஸ்ரீலஙகா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒரு சாராரின் எதிர்ப்புக்கும் மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடம் ஜே.வி.பி.யுடன் கூட்டணியை ஏற்படுத்திக் கொள்வதற்கான பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முறிந்து போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைபு ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கு அரசு தயாராகி வரும் வேளையில் இடைக்கால நிர்வாக சபையை புலிகளுக்கு வழங்குவதை தடுக்குமாறும் நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை நாட்டில் இருந்து கலைக்குமாறும் ஜே.வி.பி.ஜனாதிபதிக்கு விடுத்திருந்த கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி மௌனம் சாதித்த வருவதும் கூட்டு முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஜே.வி.பி.க்குத் தருமாறு

(10ம் பக்கம் பார்க்க)

## கிரனெற்றை வெடிக்கவைத்து சிப்பாய் தற்கொலை

### காரைநகர் கடற்படை முகாமில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தனக்குத் தானே கிரனெற்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்துள்ளார்.

நேற்றுக் மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அகலகுமார (வயது25) என்ற கடற்படைச் சிப்பாயே தனது உயிரை மாய்த்துக் கொண்டவர் ஆவார்.

இவரது சடலம் பொலிஸாரால நேற்று இரவு 9மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் இன்று கொழும்புக்கு எடுத்து செல்லப்பட இருக்கிறது. பிரஸ்தாப சிப்பாயின் நெஞ்சிலும் முகத்திலும் கடுமையான காயங்கள் காணப்படுகின்றன. (த-5)

### திலக்மாரப்பன - தயாசந்தகிரி ஆகியோரின்

## இஸ்ரேலுக்கான விஜயம் ஏற்கனவே திட்டமிடப்பட்டது

### பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிடல் தயாசந்தகிரி ஆகியோரின் இஸ்ரேலிய விஜயம் அவசரமாக மேற்கொள்ளப்பட்டவையல்ல என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சரின் இவ் விஜயம் சம்பந்தமான அறிவிப்பை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஆறு மாத காலங்களுக்கு முன்பாகவே விடுத்திருந்ததாக பாதுகாபபு அமைச்சர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரின் இஸ்ரேலிய விஜயம் திடீரென மேற்கொள்ளப்பட்டதாக செய்தி ஊடகங்களில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்படப்பட்டிருப்பதாவது இஸ்ரேலியப் பயணம் தொடர்பான அழைப்பை சென்றவருடம் கடற் படைத்தளபதி பெற்றிருந்தார் எனினும் மத்திய கிழக்கு நாடு களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அவரின் இஸ்ரேலிய விஜயம் பல தடவைகள் பிற்போடப்பட்டன. தற்போது நிலை சுமுகமடைந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சரும் கடற்படைத் தளபதியும் தமது பயணத்தை மேற்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசின் இடைக்கால சபை வரைபை புலிகளிடம் கையளிக்க நோர்வே தயக்கம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு நோர்வே அரசு தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் இடைக்கால நிர்வாக சபைக்கும் அரசு தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபைத்திட்ட வரைபுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுவதையடுத்தே திட்ட வரைபை நோர்வே விடுதலைப் புலிகளிடம் எடுத்துச் செல்வதில் தயக்கம் காட்டுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கூடிய அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு மாற்றீடாக எத்தகைய அமைப்பு முறையையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதாலேயே அரசின் யோசனைகளை விடுதலைப்புலிகளிடம் எடுத்துச் செல்வதில் நோர்வே தயக்கம் காட்டுவதாகவும் இதனால் அரசின் இடைகால நிர்வாகக் கட்டமைப்பு வரைபு விடுதலைப்புலிகளைச் சென்றடைய காலதாமதம் ஆகலாம என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று வன்னி செல்கிறார்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிவிக் ரெலிவ்சன் இன்று வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்.

மூன்று தினங்கள் வன்னியில் தங்கியிருந்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள கண்காணிப்புக் குழுத்தலைவர் முதலில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும், அடுத்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையுடனும் பேசுவார் இப்பேச்சின் போது கடலில் ஏற்படுகின்ற மோதல்களைத் தவிர்ப்பதற்குரிய புதிய யோசனைகளையும் அவர் வெளியிடவுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான யோசனைகளை முன்வைக்கவுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக குழுத்தலைவர் அந்த யோசனைகளில் இணக்கப்பாடு காணப்படும் நடவடிக்கைளை எடுக்கப்போவதாக தெரிவித்துள்ளார். (வ)

## யாழ்.குடா நாட்டில்

# சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்பே பெருமளவானோர் காணாமல் போயுள்ளனர்

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னரே யாழ்.குடா நாட்டில் பெருமளவான தொகையினர் காணாமல் போயுள்ளனர் என மனித உரிமை ஆணைக் குழுவின் கொழும்பு தலைமைச் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனோர் தொடர்பான ஆறாம் கட்ட விசாரணைக்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்த இக் குழுவின் அதிகாரிகளாகிய மனித உரிமை ஆணைக் குழுவின் தேசிய ஒருங்கிணைப்பு அதிகாரி இக்பால், முன்னாள் யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா,முன்னாள் திருமலை அரச அதிபர் கெமிலஸ் பெர்ணான்டோ ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்தும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் பாரிய இடம்பெயர்வை ஏற்படுத்திய சூரியக் கதிர் நடவடிக்கையால் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்தபோது தான் இத்தகைய காணாமல் போன சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதிலும் தென்மராட்சிப் பகுதிகளில் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகளவில் நடைபெற்றுள்ளன என்பதை எம்மால் உணரக் கூடியதாகவுள்ளது.

இத்தகைய காணாமல் போகும் சம்பவங்களால் தம் உறவுகளை பறிகொடுத்தவர்களின் வேதனையை நாம் விசாரணை நடத்தும் போது அறியக்கூடியதாக இருந்தது.

இந்தகைய உறவுகளை இழந்த குடும்பங்கள் பொருளாதார வளம் அற்றவையாகவும் மனோ நிலை அதிகம் பாதிக்கப்பட்ட நிலையிலும் விளங்குகின்றன.

எனவே,இவர்களின் தரத்தை மேம்படுத்தி அவர்களுக்கு நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க எமக்கு அதிகாரம் இல்லை.எனவே இது தொடர்பான அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவுள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

தம்மால் தமக்கென அதிகாரம் அளிக்கப்பட்ட 330 வரையிலான காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளில் 90 வீதமானவை விசாரிக்கப்பட்டுள்ளன.

ஏனையவை இந்த மாதப் பகுதிக்குள் விசாரிக்கப்பட்டு அடுத்த மாதமளவில் விசாரணை அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

இவ்வறிக்கையில் நாம் விசாரணை மேற் கொண்ட முழு விபரமும் குறிப்பிடப்படும்.இதேவேளை பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்ய நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தனர்.(க-4)

## மாணவர் எழுத்தாக்கப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற மாகாண நிலை எழுத்தாக்கப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதால்,இப்போட்டிகளுடன் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் உரிய மாணவர்களை பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## புத்தூர் பாடசாலையில் நூற்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் நூலக வாரத்தின் ஆரம்ப நாள் விழா திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப அறங்காவலரும் கல்லூரியின் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்க லண்டன் கிளைத் தலைவருமான வே.சிவசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை,நூலக வாரம் தொடர்பாக யாழ். ஸ்ரீலங்கா புத்தக சாலையினரின் நூற் கண்காட்சியும் விற்பனையும் கல்லூரியின் நூலகக் கேட்போர் கூடத்தில் அன்றைய தினம் இடம் பெறவுள்ளது. (உ)

# யப்பானிய அமைச்சர் இலங்கை வருவார்

(கொழும்பு)

யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் எக்ஸ்சிரோயனோ இம் மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்இடையில் முறிந்து போன நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்காக யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் எக்ஸ்சிரோயனோ இங்கு வரவிருப்பதாக யப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முக்கிய அமைச்சர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### பேரின்பப் பொருளே

அலைநடுவே அன்னைக்குக் கோயில் நயினையிலே
சிலையாகி அன்புதரும் தாயவளைத் துதிக்கையிலே
மலைபோல துன்பம் எல்லாம் மறைவதுதான்
விலையாலே பெறமுடியா பேரின்பப் பேருளே

நாகம் மலரிட்டு நாகேஸ்வரியானாய்
நாகர் குலம்தொழுது நாகம்மையானாய்
நாகத்தில் வீற்றிருக்கும் நாகபூஷணியே-நீ
நாடிவரும் பக்தருக்கு ஏது ஆவாய்அம்மா

-வட்டூர் வரதர்

### தொழு திட பலகோடி கண்கள் போதாதே!

கருநிறக் கடலோடிணைந்து
கடுவிடப் படமோடு சுந்த
பதியது உனதாகி நின்ற சிவகாமி-இங்கு

பசிபிணி அதனோடிணைந்த
படுதுயர் எதுவாகி வந்தும்
அணிகிட அழிவாகின்ற அருளாலே -இங்கு

வலசிவன் இடமோடு அன்னை
வரையதில் கயிலாய சொர்க்கம்
தொழுதிடப் பல்கோடி கண்கள் போதாதே!

– கொற்குலன்

### அமைதியைத் தருவாய்!

ஸ்ரீ நயினை ராணி ஷீரபவானி
சிந்தையே குடிகொண்ட
சிங்கார வாணி!
ஸ்ரீ நயினை
மாநகர் காஞ்சியில்
மகிழ்ந்துறை தாய்நீ!
மானிடம் யாவையும்
புரந்திடுவாய் நீ!
ஸ்ரீ நயினை
அகத்திலும் புறத்திலும்
அமைதியைத் தருவாய்!
ஆறஞ்சு பகைவருண்டு
அவரை வேரறுப்பாய்!
இகத்திலும் பரத்திலும்
எமக்கான நிதியே!
ஏகாம்பரி ! நயினை
நாகாம்பரி சிவையே
ஸ்ரீ நயினை

-நிவேதிதா

உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




விலை 14/-

★இடைக்கால சபையிலும் இழுபறி
★பிரதமர் ரணிலின் மீட்பராக அமெரிக்கா
★உலகையே சோகத்தில் ஆழ்த்திய இரட்டைச் சோதரிகளின் மரணம்
★மகனை வெட்டிக் கொன்ற தந்தை
★ஆலடி மாநாடு
★வியாசரின் பதில்கள்
★செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
★பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில்
உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

# காணிகளைச் சுவீகரிக்க

# புதிய சட்டம் அமுல்

## நிதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென காணிகளை சுவீ



கரிப்பது தொடர்பான புதிய சட்டமொன்றை அரசு அமுல்படுத்தவுள்ளதாக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் தற்போதைய சட்டதிட்டங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே புதிய சட்டமொன்றை அரசு அமுல்படுத்தவுள்ளது.

அத்துடன், அபிவிருத்தி நடவடிக்கைகளை தாமதமின்றி குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கும் இப்புதிய சட்டமூலம் உதவும்.

மேலும், விமான நிலைய விஸ்தரிப்பு, துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகள், போக்குவரத்து விஸ்தரிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் ஏற்படும் காலதாமதங்களை நீக்குவதற்கும் இது பயன்படும் என்றார் அமைச்சர் சொக்ஸி. (உ-10)

## மிதிவெடியால் பாதிப்புற்ற

## 64 பேருக்கு சுயதொழில் கடன்

(தென்மராட்சி)

மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட 64 பேருக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனம் சுயதொழில் முயற்சிக்கென தலா 12 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடனேயே சர்வோதயம் இக்கடன் திட்டத்தினை அமுல் செய்துள்ளது என சர்வோதய நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (உ-77)

### இடைக்கால நிர்வாகசபை வரைபு

## ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க

## கோருகிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான அரசின் யோசனைகளை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து விளக்கமளிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் சார்பில் கலாநிதி சரத் அமுனுகம அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்திருப்பதாவது,

இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் அரசு கொடுக்குமானால் அந்த யோசனைகளை விஸ்தரிக்கும் அமைச்சரவைக்கும் கண்டிப்பாக வழங்க வேண்டும் என்று கலாநிதி சரத் அமுனுகம கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

### 84 ஆயிரத்து 141 பேரிற்கு

## பிரஜா உரிமை வழங்க

## இலங்கை அரசு முயற்சி

(கொழும்பு)

தாயகம் திரும்புவதற்காக இந்திய கடவுச்சீட்டுப் பெற்றுக் கொண்ட 84ஆயிரத்து 141 பேரிற்கு பிராஜாவுரிமை வழங்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி திணைக்களம் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு லட்சத்து 68ஆயிரத்து 141 இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளமையின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, 1964ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் பிறந்த இந்திய வம்சாவழியினர்க்கும் பிரஜாவுரிமை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-10)

### ஜி.ரி.சற் உதவியுடன்

### சண்டிலிப்பாய் பி.செ.பிரிவில்

## 50 வீடமைப்புத் திட்டம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் மேற்கு, பெரிய விளான் கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள குடும்பங்களுக்கு 50 வீடுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள சொந்தக் காணியுள்ள வீடற்ற குடும்பங்களுக்கே இத்திட்டத்தின் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவ்வீட்டுத் திட்டத்தின் அமைவிடம் தொடர்பாக கடந்த வியாழன்று பிரதேச செயலர் எஸ்.சிவராசா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள், அப் பகுதி பொது சுகாதார பரிசோதகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் இரு வாரத்தினுள் மேற்படி வீட்டுத் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (உ-252)

# செய்தித்துளிகள்

## விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் இயங்கிவரும் கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிநெறிகளை மேற்கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

## சமுர்த்தி உத்தியோகத்தர் மன்றக்குழு தெரிவு

(ஊர்காவற்றுறை)

யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றக் குழுத் தெரிவுக் கூட்டம் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.நடேசராசா, தேசிய சமுர்த்தி உத்தியோகத்தர் மன்ற உப தலைவர் எஸ்.அருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நடப்பு வருடத்திற்கான தலைவராக யாழ். பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சி.சிறீதரனும், செயலாளராக உடுவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த செல்வி ச.காந்திமதியும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## *காரை மாணவன் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு*

(காரைநகர்)

வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் பாடசாலைகளிற்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 17 வயதிற்குட்பட்டோர் உயரம் பாய்தலில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவன் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சொ.புஸ்பலிங்கம் என்ற இந்த மாணவன் கடந்த காலங்களில் மாவட்ட, மாகாண ரீதியில் பல பரிசுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

## *பதவி உயர்வுப் பரீட்சை*

(கல்வயல்)

சுகாதார சேவை திணைக்களத்தால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களையும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களையும் தரம் 11ற்கு உயர்த்துவதற்கான திணைக்களப் பரீட்சை மும் மொழிகளிலும் நடத்தப்படவுள்ளது.

ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள்; பல்சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகதர்கள் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் விண்ணப்ப முடிவு அடுத்த மாதம் 15ஆம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கைக்கு பரீட்சை நிலையம் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு இம்மாதம் 11ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை பார்வையிட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-111)

## *பதவிப் பெயர்கள் மாற்றம்*

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த 'மாகாண முகாமையாளர்' எனும் பதவிப் பெயர் 'மாகாணப் பிரதிப் பணிப்பாளர்' எனவும், 'மாவட்ட முகாமையாளர்' என்னும் பதவிப் பெயர் 'மாவட்ட உதவிப் பணிப்பாளர்' எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் சீ.கழுப்பகனகே 24.06.2003 திகதியிடப்பட்ட 3/1/1/20ம் இலக்கச் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (உ)

## நாணையக் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

வெளிநாடு ஒன்றிற்கு சட்ட விரோதமான முறையில் கடத்தப்படவிருந்த ஒரு கோடி ரூபா பெறுமதியான உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்களை சுங்கப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று கொள்ளுப்பிட்டியிலிருந்து வெளிநாடு ஒன்றிற்கு அனுப்பப்படவிருந்த பொதியொன்றை சுங்கப்பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## குடிநீர்க் கிணறு அமைப்பு

(கல்வயல்)

சாவகச்சேரி கச்சாய் தெற்கிலுள்ள வினோபா நகரில், பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் குடிநீர்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இதன்மூலம் இப்பகுதி மக்கள் குடிநீர்த் தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்து வருகின்றனர். (உ-111)

## புளியங்கூடல் அணி முதலிடம்

(ஊர்காவற்றுறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஓரங்கமான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலைய அணி முதலிடத்தையும் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் சனசமூக நிலைய அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.(உ-75)

## பொ.ஐ.முவின் செயற்குழுக் கூட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட உடன்பாடுகளைப் பகிர்ந்து கொள்ளவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இல்லத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ஜே.வி.பியுடனான பேச்சுவார்த்தையில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி விளக்கிக் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## இன்று பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட பேச்சுப்போட்டி இன்று காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறும் என உள்ளூராட்சி வார நிகழ்வு தொடர்பாக செயலணிக் குழு செயலாளர் தெரிவித்துள்ளார். (க-3)

## 'இடர்கள் கெடுக' பாடசாலைகளில்ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் துணை நிறுவனமான செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் 'இடர்கள் கெடுக' எனும் மிதிவெடிவிழிப்புணர்வு அரங்குசார் உரையாடல் நிகழ்வுகளை மிதிவெடி அபாயமுள்ள தென்மராட்சி வடமராட்சி மற்றும் வலிகாமம் உள்ளிட்ட பல்வேறு பாடசாலைகளில் நடாத்தி வருகின்றனர்.

அந்த வகையில் இன்று திங்கட்கிழமை அளவெட்டி தெற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், நாளை 15ஆம் திகதி அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 16ஆம் திகதி அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திலும், 17ஆம் திகதி அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்திலும், 18ஆம் திகதி அளவெட்டி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இவ அரங்கசார் உரையாடல் நிகழ்வு தினமும் மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-15)

## *அடிப்படை வசதிகள் இன்றி அல்லல்*

(தென்மராட்சி)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள எழுவைதீவில் வசிக்கும் குடும்பங்கள் போதிய சுகாதார, மருத்துவ வசதிகள் இல்லாமையினால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்குள்ள மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்கு கடலைக் கடந்தே ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மக்களின் துயர் துடைக்கும் நோக்குடன் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அம்புலன்ஸ் படகு ஒன்றினை நிர்மாணித்துச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது தெரிந்ததே. (உ-77)

## *கட்டாக்காலி நாய்களால் தொல்லை*

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சந்தைப் பகுதி, ஜே/49 பிரிவுக்குட்பட்ட சுருவில், கரம்பன் துறைமுகப் பகுதி ஆகிய பிரதேசங்களில் அண்மைக் காலமாக கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் அவற்றின் தொல்லையைக் கட்டுப்படுத்த எவரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-15)

## நோயாளியைக் கொல்ல முயன்ற மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஒருவரை கொலை செய்ய முயன்ற மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த நபர் ஒருவர் தேசிய வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரைக் கொலை செய்யவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மருதானைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகளும், கத்தி ஒன்றும் கைபற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

(தனங்கிளப்பு)

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் வட-கிழக்கு மாவட்ட அணிகள், சுவிஸ் நாட்டு அணிகள் ஆகியன பங்குபற்றிய கனிஷ்ட பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த 10ஆம் திகதி தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 13 வயதுப் பிரிவுக்கான போட்டிகளில் திருமலை மாவட்ட அணியை, மட்டக்களப்பு தெரிவு அணி 11:01 என்ற கோல் கணக்கில் வென்றது.

அதேவேளை, கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவுக்கான போட்டிகள் தொடரில் வவுனியா தெரிவு அணியை எதிர்கொண்ட அம்பாறை தெரிவு அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

இப்போட்டிகள் யாவற்றிலும் பாடசாலை மாணவர்களே அதிகளவில் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-37)

## மீளாய்வு

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளில் சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

வசதிகளற்ற, யுத்தத்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் பொது சன மாதாந்த உதவிப் பணத்தைப் பெறும வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவே இம்மீளாய்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-36)

## இன்று ஒரு தகவல்

# விலங்குகளின் பண்புகள்

காலையில் எழுந்து சிறிது தூரம் நடந்து செல்கின்றீர்கள். சிறிது தூரம் நடந்து விட்டு வீடு திரும்புகின்றீர்கள். இது ஒரு சாதாரண விடயம்.

இருந்தாலும் உங்கள் வீடு இருக்கும் இடத்தைச்சரியாக கண்டு பிடித்து விடுகின்றீர்களே. அது எப்படி? ஒரு மனிதன் தன்னுடைய வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற போது, சில அறிமுகமான கட்டடங்கள், மரங்கள் பாதையின் அமைப்பு இவற்றைப்பற்றிய விபரங்களை தனது நினைவுகளி லிருந்து மீட்டுப் பரிசீலனை செய்து, தான் சேரவேண்டிய இடம் வந்து விட்டது என்பதனை உணர்ந்து கொள்கிறான்.

சிலர் வீட்டில் கோபித்துக்கொண்டு வெளியில் செல்வது வழக்கம். இவர்கள் எல்லோரும் வேறு பாதைகள், மரங்களை நினைவுக்கு கொண்டு வந்து அந்த வழியால் சென்று விடுவார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால்,

''பட்டறிவு'' அதாவது, ''அனுபவத்தின் மூலம் கற்றுக் கொள்ளும் பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு'' என இதுவரை கூறிக்கொண்டிருந்தனர்.

அண்மைக்காலத்தில் சில ஆராய்ச்சிகள் செய்து பார்த்து விட்டு, இது போன்ற பண்புகள் விலங்குகளுக்கும் உண்டென்று கூற ஆரம்பித்துள்ளனர். இது ஏற்கனவே, நமக்குத்தெரிந்த விடயம் தான்.

தேனீ இருக்கின்றதே, அது தேன் கிடைக்கக்கூடிய இடங்களை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளும். சரியாகச் சென்று தேன் எடுத்து விட்டு தனது இடத்திற்கு வழிதவறாது திரும்பி விடும். இது எப்படி தனது ஞாபகத்தில் வைத்துக்கொள்கின்றது தெரியுமா?

தேனின் நறுமணம், தேன் உள்ள மலரின் வடிவம், அந்த மலர் மலரும் நேரம் இவ்வாறு வரிசைக்கிரமமாக தகவல்களை சேகரித்து வைத்துக்கொள்ளும்.

நாம் கதிரை, மேசை, அலுமாரி இவற்றை மரச்சாமான்கள் என்று வகைப்படுத்தி வைத்திருக்கின்றோமல்லவா? அது போல, புறாக்கள் யாவும் ஒரே வடிவம் கொண்ட மரங்களை ஒருகுழுவாக வகைப்படுத்தி வைத்திருக்கிறதாம்.

விலங்கு ,பறவை, பூச்சி இவையாவும் சுயேச்சையான சூழ்நிலை யில் இருக்கும்பொழுது எவ்வாறு நடந்து கொள்கின்றது? ஆராய்ச்சிக்கூடத்தில் கட்டுப்பாடான சூழலில் எவ்வாறு நடந்து கொள்கின்றது?.

கடந்த 10 வருடங்களாகத்தான் விஞ்ஞானிகள் இதைப்பற்றி தீவிரமாக ஆராய்ந்தனர். விலங்குகள் நடந்து கொள்ளும் விதம் பற்றி கூறும்பொழுது, இரண்டு வித அணுகுமுறைகள் உண்டு. ''உள்ளுணர்வு'' ஒன்று அதாவது Instinet. இன்னும் மொன்று ''பட்டறிவு'' அதாவது அனுபவம். Experience இவை இரண்டும் தனித்தனியாகப் பிரிந்திருப்பதில்லை. அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளும் திறமை மனிதனுக்கு மட்டும் தான் உண் டென்று நினைத்துக்கொண்டிருந்தோம். விலங்குகளுக்கும் அந்தத் திறமை உள்ளதென்பது இப்போது தெரிந்துள்ளது.

ஒரு விலங்குக்குத்தான் உயிர்பிழைத்து வாழ்வதற்காக, தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தனது நடத்தையை மாற்றிக்கொள்ளும் திறமையுள்ளது.

பொதுவாக விலங்கு, பறவை, பு,ச்சி இவற்றிற்கெல்லாம் பயிற்சிகொடுத்தால் கற்று கொள்ளும் என்று ஒரு எண்ணம் ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தது. இது தவறானதாம். பரிணாம வழியாகத்தோன்றிய ஓர் உள்ளுணர்வு இருந்தால் தான் ஒரு உயிரினம் ஒரு நடத்தையை மேற்கொள்ளும். அந்த உள்ளுணர்வு பரிணாம வளர்ச்சியில் மரபு வழியாக வருவது.

இதனால் படைப்பில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை என்பது தெளிவாகி விட்டது. அதற்குப்பிறகு ஏன் மனிதர்களுக் குள்ளே வித்தியாசம்? அகந்தையால் வருவது தான் இந்த வித் தியாசம்.

ஒருவர் இருந்தார். தன்னைப்பற்றி எப்பொழுதும் பெருமை யாக நினைத்துக்கொள்பவர். அவர் ஒரு நாள் இன்னொருவரை பார்க்கச் சென்றார். அந்த இன்னொருவர் அப்பொழுது தான் தீவிரமாக ஒரு புச்சியைப்பற்றி ஆராய்ச்சித்துக் எழுதக்கொண் டிருந்தார். இவரைப்பார்த்து ''ஒரு நிமிடம் இந்தக் கதிரையில் அமருங்கள். இதோ வந்து விடுகின்றேன்'' என்றார். அவரைப் பார்க்கப்போனவருக்கு கோபம் ''இந்தப் புச்சியை விட, நான் என்ன மட்டமா?'' என்று நினைத்து விட்டார்.

நான் யார் தெரியுமா? ரொம்பப் பெரியமனிதர் என்றார். இவரே அப்படியொன்றால் இரண்டு கதிரையில் அமருங்கள் என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பௌத்த மதத்தைப் பரப்ப இலங்கை அரசு புதிய யுக்தி

(கொழும்பு)

பௌத்த பிக்குமாருக்கு பிற மொழிப பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை அரசு விரைவில் நடை முறைப்படுத்தவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இதன் பிரகாரம் ஜப்பான், தாய் லாந்து, பர்மா ஆகிய நாட்டு மொழி கள பௌத்த பிக்குமார்களுக்கு போதிக்கப்படவுள்ளது.

ஆசிய நாடுகளிலும் உலகில் ஏனைய பிரதேசங்களிலும் பௌத்த மதத்தை பரப்புவதற்காகவே பௌத்த பிக்குமார்களுக்கு இப்பிற மொழிப் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் குறிப் பிட்ட ஒரு மொழியில் பயிற்சி பெற்ற பௌத்தபிக்கு ஒருவர் அந்த மொழி பேசப்படும் பிரதேசத்தில் பௌத்த மதத்தை பரப்புவதற்கென அனுப்பி வைக்கப்படுவார் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (உ-10)

# ஆரோக்கியமான நாளைய சமூகம் இன்றைய மாணவரிலேயே தங்கியுள்ளது

## மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)

இன்றைய மாணவர்களே எதிர் காலத்தின் சிற்பிகள் ஆரோக்கிய மான நாளைய சமூகம் அவர்களது கைகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் கருணா அம்மான்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கிறான் தேனகம் விடுதியில் இடம் பெற்ற கல்வி துறை சார்ந்தோர் களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும உரை யாற்றுகையில், மாணவர்களின் ஒழுக் கங்களைப்பேணுவதில் ஆசிரியர் சமூகத்தினர் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

ஒழுங்கற்ற நடவடிக்கையில் மாண வர்களை ஈடுபடுத்தமுயலும் சில தீய சக்திகளின் செயற்பாடுகளை கல்வித் துறை சார்ந்தோர் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் மாண விகளை ஈடுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக மட்டுமல்லாது எமது பௌதிக வளங்களை நன்கு அறிந்து, அறிவுள்ள சமுதாயமாகவும், மாணவர்களை கல்வியில் சிறந்த பெறுபேறு களை பெறக்கூடியவர்களாகவும் மாற்றி அமைக்கும் சக்தி ஆசிரியர்களுக்கு மட்டுமே உண்டு.

மாணவர்களது கல்வியிலும் ஒழுங்கு நடவடிக்கைகளிலும் ஆசிரியர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். இன்றைய மாணவ சமூகம நாளைய தமிழர் தாயகத்தில் சிறந் தவர்களாக விளங்கவும், செயற்திறன மிக்கவர்களாக உழைக்கவும் கல்விச் சமூகத்தினர் பாடுபட வேண்டும் என்றார். (க-8,14)

# முல்லைக்கடலில் காவியம் படைத்த 12 புலிப்போராளிகளின் விபரங்கள்

## தலைமைச் செயலகம் வெளியிட்டது

(திருநெல்வேலி)

முல்லைத்தீவுக்கு அப்பால் சர்வ தேசக் கடற்பரப்பில் கடந்த மாதம் 14ஆம்திகதி விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் கடற்படையின ரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத் தில் வீரகாவியமான 12 போராளி களின் பெயர் விபரங்களை நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் கிளிநொச்சியிலுள்ள தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ளது.

அவர்களின்பெயர் விபரம் வருமாறு:

*லெப்கேணல் அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவகுமார்- வல்வெட்டித் துறை யாழ்ப்பாணம்)

*லெப்கேணல் செந்தமிழ் அல் லது வீரமணி (சின்னராசா சிவரூபன்- வெறறிலைக்கேணி, வடமராட்சி கிழக்கு)

*லெப்கேணல்கதீர (செல்வரட்ணம் சுசீந்திரன- மீசாலை தெற்கு சாவகச் சேரி)

*லெப்கேணல் கஜேந்திரன் (நல் லையா- கிருஷ்ணன் -ஜெயபுரம் கிளிநொச்சி)

*மேஜர் நிர்மலன் (தனராஜா ரகுநாதன்- நெடியகாடு வல்வெட்டித் துறை)

*மேஜர் கன்னிய நாடான்( பொன் னையலம் கிருபாகரன்- பேராளை,பளை)

*மேஜர் வள்ளுவன் (துரை சைலேஸ்வரன் ஏழாலை தெற்கு)

*மேஜர் நிமால் (தங்கராஜா செல்வக்குமார்- பரந்தன் கிளிநொச்சி)

*மேஜர் மணியரசன்( முத்துலிங் கம் -லவக்குமார்-நெடுங்கேணி)

*மேஜர் வீரநாதன் (தியாகராசா தயாநிதி- முல்லைவீதி மாங்குளம்)

*கப்டன் செழியன் அல்லது அன்பு (சொக்கலிங்கம் ஜெகன்- உதய நகர் கிளிநொச்சி)

* நாட்டுப்பற்றாளர் மோகன் நாரந் தனை ஊர்காவற்றுறை). (இ-43)

## இராசி பலன்

**14. 07. 2003**

**(ஆனி 30, திங்கள்)**

**பிரதமை மு.இ. 10.19 வரை**

**உத்தராடம் பி.இ. 12.34 வரை**

**இராகுகாலம்- 7.30-9.00**

**சுபநேரம் -12.00-1.30**

**மேடம்**
தொழில் நன்மை, நல்ல செய்தி, இலட்சுமிகரம், எடுத்த காரியம் கைகூடும்.

**இடபம்**
சீரஉழைப்பு, புதியசிந்தை, தனவிரயம், அபகீர்த்தி.

**மிதுனம்**
பிரயாண பயம், எதிர்பாரத மனஸ்தாபம், உஸ்ணவியாதி, முயற்சி தாமதம்.

**கடகம்**
உறவினர் வருகை, தேக நலன், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை.

**சிங்கம்**
மனமகிழ்ச்சி, தேகஆரோக்கியம், திடீர் பயணம், தொழில் நன்மை.

**கன்னி**
குடும்பக்கவலை,எதிர் பாராத நன்மை, புதிய திருப்பம், முயற்சி தாமதம்.

**துலாம்**
மனச்சோர்வு, சயனசுகம், அபகீர்த்தி, காரியதாமதம்.

**விருச்சிகம்**
பிரயாண நன்மை, சகோதரர் உதவி, தொழில் வருமானம், காரிய அனுகூலம்.

**தனுசு**
மாதர் நட்பு, திடீர் நன்மை, விவாதம், முயற்சி தாமதம்.

**மகரம்**
செல்வாக்கு காரியநன்மை, நண்பர் சந்திப்பு, உடல் நலம்.

**கும்பம்**
சயனசுகக்குறைவு, கற்பனைமிகுதி, குடும்பக்கவலை, காரிய தாமதம்.

**மீனம்**
எடுத்தகாரியம் கைகூடும், தொழில் வருமானம், உறவினர்வருகை, கீர்த்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# பொலிஸ்சேவையில் பதவி உயர்வுகள் நியமனங்களை ஆணைக்குழுவே மேற்கொள்ளும்

## தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் சகல நிய மனங்களும், பதவி உயர்வுகளும், இடமாற்றங்களும் பொலிஸ் ஆணைக் குழுவினாலேயே மேற்கொள்ளப் படும் என ஆணைக்குழுவின் தலை வர் றஞ்சித் அபசூரிய தெரிவித் துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறு கையில், உயர்தர பொலிஸ் உத்தி யோகத்தர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற் றங்கள் ஆகியன பொலிஸ் ஆணைக் குழு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவே நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் என்பவற்றை மேற்கொண்டார்.

ஆனால் எதிர் காலத்தில் பொலிஸ் ஆணைக்குழுவே இதனை மேற்கொள்ளும்.

இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதியரசர் சரத்குணதிலக பொலிஸ் ஆணைக்குழுவின் தவைராக பணி யாற்றுவார்.

பொலிஸ் சேவையை அரசியல் தலையீடுகள் இன்றி காப்பாற்றும் நோக்கத்துடனேயே இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இனிவரும் காலங் களில் பொலிஸ் உத்தியோகத் தர்கள் தமது பதவி உயர்வுகள், இட மாற்றங்கள் ஆகியன சம்பந்தமாக அரசியல் அதிகாரிகளுக்கு பின் னால் செல்ல வேண்டிய நிலை ஏற்படாது.

அதேவேளை, பொலிஸ்சேவை தொடர்பாக பொது மக்கள் தெரிவிகும் முறைப்பாடுகளை விசாரணை செய் வதற்கு விசேட திட்டமொன்றும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்றார். (க-10)

# சட்டத்துறையில் உயரிய இலக்கை அடைவதற்கு கடும் உழைப்பு அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டத்தரணி ஒருவர் கடும் போக் குடையவராக செயற்படாது சட் டத்தைப் பாதுகாக்கும் வகையில் கடுமையாகவும் உறுதியாகவும் உழைக்கவேண்டும்.

அவ்வாறானால் தான் சட்டத் துறை வாழ்க்கையில் உயரிய இலக்கையும் வெற்றியையும் அடைய முடியும் என ஜனாதிபதி சந் தரிகா குமாரதுங்க தெரிவித்துள் ளார்.

சட்டத்துறையில் 50 ஆண்டு களைப் பூர்த்தி செய்த தேச மாணிய சடடவல்லுநர் எச்.எல்.டி சில்வா வைப் பாராட்டிகௌரவிக்கும் வைப வத்தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக கிரமசிங்கவும் கலந்து கொண்டு உரையாற்றினார். (க-10)

# போலியாக அச்சிடப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களைப் போன்று போலி சீட்டுக்களை அச் சிட்டவர்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அல்பிட்டியவில் இயங்கிவரும் அச்சகம் ஒன்றிலேயே இப்போலி அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் அச்சிடப் பட்டுள்ளதாகவும் அவ் அச்சகத்தை நடாத்தி வந்த இருவரையும் தாம் கைது செய்துள்ளதாகவும் அல் பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

பரிசு பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் இலக்கங்கள் இப் போலி சீட்டில் அச்சிடப்பட்டுள்ள தாகவும் அல்பிட்டிய பொலிஸ் நிலை யபொறுப்பதிகாரி கிங்ஸ்லி பெரேரா தெரிவித்துள்ளார். (க-3)

# இலங்கைவரும் தமிழ் நாட்டு அறிஞர்கள்

## அன்றும் இன்றும்

ஐம்பதுகளின் முற்பகுதியில் என்று நினைக்கிறேன். இந்தியாவிலிருந்து தமிழ் அறிஞர் ஒருவர் இலங்கைக்கு வருகைதந்தார். அவா தமிழ் அறிஞர் மட்டுமல்ல அரசியல் வாதியும்கூட.

விமான நிலையத்தில் அவரை நேரில் சந்தித்த தமிழ்ப்பத்திரிகை நிருபர் ஒருவர் 'இலங்கையில் பேசப்படும் தமிழைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்' என்று கேட்டார்.

'ஆகா பிரமாதம், இங்குதானே இனிமையான தமிழ் பேசப்படுகின்றது' என்று தொடங்கி இலங்கைத் தமிழைப் பற்றி விளாசித்தள்ளி விட்டார் அறிஞர்.

அவர் அரசியல்வாதி என்பதால் எதைச்சொன்னால் பத்திரிகைகளில் பெரிதாக இடம் பிடிக்கலாம் என்பதை நன்றாக அறிந்திருந்தார், அதற்கேற்ற மாதிரி கவர்ச்சியான கருத்துக்களை அள்ளி வீசினார். பத்திரிகைகளும் கொட்டை எழுத்துக்களிள் பிரசுரித்தன. அவர் சென்ற இடங்களிலெல்லாம் இலங்கைத் தமிழர் பற்றியும் தமிழின் இனிமைபற்றியும் பிரமாதமாக பேசி கைதட்டுக்களைப் பெற்றுக் கொண்டு திரும்பினர்.

### இன்னொரு அறிஞர்

சில காலத்துக்குப் பின்னர் இன்னுமொரு தமிழ் அறிஞர் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்தார். அரசியலுக்கும் அவருக்கும் வெகு தூரம்.

அவரிடமும் பத்திரிகை நிருபர் இலங்கைத் தமிழர்பேசும் தமிழ் மொழிபற்றி தனது மாமூல் கேள்வியைக் கேட்டுவைத்தார். அதற்கு அந்தத் தமிழ் அறிஞர் கூறினார்.

'தம்பி நான் இப்பொழுது தான் இலங்கைக்கு வருகின்றேன். இங்கே பேசப்படும் தமிழைப்பற்றி முன்னரே கேள்விப்பட்டிருக்கிறேன். இனிமேல்தான் பல இடங்களுக்கும் சென்று இங்கே மக்கள் பேசுகின்ற மொழியைப்பற்றி அறியப் போகின்றேன். உங்கள் கேள்விக்கு இப்பொழுது எனது பதில் இதுதான்' என்று கூறமுடித்தார்.

நிருபர் எதிர்பார்த்த விடை கிடைக்காது போனமை அவருக்கு ஏமாற்றம்தான். அந்த அறிஞரின் வருகைபற்றி மட்டும் ஒரு சிறு செய்தியை தமிழ் பத்திரிகைகள் பிரசுரித்து திருப்தி அடைந்தன.

சிலநாட்கள் பல இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு அவ்வறிஞர் நாடுதிரும்பவிருந்த வேளையில் குறித்த நிருபர் அவரை சந்தித்து கேள்வி கேட்டார் 'இப்பொழுது இலங்கைத்தமிழ் பற்றி என்ன கூறுகிறீர்கள்' என்ற நிருபரின் கேள்விக்கு அறிஞர் சொன்னார்!

இலங்கையில், யாழ்ப்பாணத்தில் பேசப்படும் தமிழ் குறிப்பாக கிராமங்களில் வட்டார உச்சரிப்புகளும் மரபுகளும் விரவிக் காணப்படும் அதேசமயம் பழைய இனிய தமிழ்ச்சொற்கள் இன்றும்கூட நடைமுறை பாவனையில் இருப்பது ஆச்சரியமாக இருக்கின்றது. இதுபற்றி தனியாக ஒரு ஆராய்ச்சியே செய்வது பயனாக இருக்கும். கிழக்கு மாகாணத்தில் பேசப்படும் தமிழிற்கும் வடக்கு மாகாணத்தில் பேசப்படும் தமிழிற்கும் ஆங்காங்கே வேறுபாடுகள் இருப்பதை அன்பர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

மலையகத்தில் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குழுக்களாக மக்கள் வந்து குடியேறியிருப்பதால் ஒருவித கலப்பு தமிழ் பேசப்படுகிறது. சிங்களக் கிராமங்களை அண்டிவாழ்பவர்கள் மத்தியில் சிங்கள சொற்களும் விரைவிக்காணப்படுகின்றன.

இலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் மிகவும் வித்தியாசமான ஒரு தமிழ்பேசப்படுவதாக தெரிகின்றது. இவைபற்றியெல்லாம் எழுந்தமானமாகமட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது. ஆழமாக ஆராய்ச்சி செய்ய அவகாசம் போதவில்லை' என்றார்.

'அப்படியான ஆராய்ச்சி எதிலும் ஈடுபடும்எண்ணம் உங்களுக்கு உண்டா?' என்று நிருபர் கேட்ட போது! 'அப்படியானஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் மகிழ்ச்சியோடு செய்வேன். நான்தான் செய்ய வேண்டுமென்பதில்லை மொழி ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் யாராலும் விரிவாகவும் ஆழமாகவும் இதை செய்வார்களானால் தமிழ் மாணவர்களுக்கு பயனாய்இருக்கும்' என்றார்.

### தமிழறிஞர் சதாசிவம்

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் அறிஞர் பன்மொழிப்புலவர் முனைவர் மு. சதாசிவம் இந்த முயற்சியை ஓரளவிற்கு நிறைவேற்றி வருகிறார் போல் தெரிகிறது.

யாழ்ப்பாணம் இந்துமத குருகுலத்தில் கவிஞர் துரையருடன் நடத்திய உரையாடலின் போது முனைவர் சதாசிவம் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவரது உரையாடல் வலம்புரியில் வெளியாகியிருந்ததை வாசகர்கள் அறிவார்கள்.

அவர் கூறியிருந்த சில கருத்துக்கள் வருமாறு உண்மையில் யாழ்ப்பாணத்தமிழ் மிகவும் உயர்ந்த தமிழ் புதிய புதிய சொற்களையும் கருத்துக்களையும் வளர்த்துக் கொண்ட ஒரு தனிமொழிபோல ஒரு சிறந்த வட்டார வழக்காக இருந்தாலும், தமிழ்மொழியோடு வளர்ந்தவர்களுக்கு தமிழ்அறிவு மிகவும் வளர்ந்திருக்கும்.

புறநானூற்றுப் பாடல்களில் அருஞ்சொற்பொருள் கூறியிருக்கின்றார்கள் அதுபோல வட்டார வழக்குச் சொற்களுக்கும் அருஞ் சொற்பொருள் கூறினால் நன்றாக இருக்கும். யாழ்ப்பாணத் தமிழை குறைவாக மதிப்பதாக எண்ண வேண்டாம் இந்தத் தமிழ் வளர்ந்தோங்கிய சிறந்த தமிழாகவே இருப்பதனால் தொடர்புகள் அற்றுப்போய் விட்டதனால் எமக்கு பலசொற்கள் புரியவில்லை. அதனால் தான் யாழ்ப்பாணத் தமிழ் அகராதியை தொகுத்திருக்கிறேன். அதிலே பதினைந்தாயிரம் சொற்கள் தமிழகத் தமிழிற்கும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் சொல்லிலும் பொருளிலும் வேறுபாடான சொற்கள் இருக்கின்றன. இவற்றைத் தொகுத்து 400 பக்கத்தில் இந்த அகராதி வெளிவர இருக்கிறது. இலங்கைத்தமிழ் அகராதி என்ற பெயரில் எல்லாவட்டார வழக்குகளையும் தொகுக்க வேண்டுமென்றே எண்ணினேன். ஆனால் யாழ்ப்பாணத் தமிழிற்கு ஒரு தனித்துவம் இருப்பதனால் அதை முதலில் தொகுக்கவுள்ளேன். இங்கு மலையத்தமிழ் இஸ்லாமியத் தமிழ் மட்டக்களப்பு தமிழ என நான்கு வகையான வட்டார வழக்குகளை சேர்த்து இலங்கைத் தமிழகராதி என்ற பெயரில் வெளியிடவிருக்கிறேன் என்று கூறியுள்ளார் அவர்.

### அடிக்குறிப்பு

இலங்கைத்தமிழ் எழுத்தாளர் படைக்கும் இலக்கியங்களில் வரும் யாழ்ப்பாணத் தமிழிற்கு அடிக்குறிப்புகள் இடுதல்வேண்டும் என்று முன்னார் ஒருமுறை கலைமகள் ஆசிரியர் சி.வா..ஜகநாதன் அவர்கள் இங்கே ஒரு கருத்தை வெளியிட்டதின் மூலம் ஈழத்து படைப்பாளிகளின் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தார்.

## படைப்புகளும் அவைக்கான பரிசுகளும்

தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலும் பேசப்படும் வட்டார மொழிவழக்குகள் அங்கு வெளிவரும் தமிழ் நாவல்கள் சிறுகதைகளில் தாராளமாக கையாளப்படுகின்றன அதேபோல் இங்கேயும் இந்நாட்டுக்கே உரிய வட்டார வழக்குகளை எழுத்தாளார்கள் தமது இலகக்கிய படைப்புக்களில் பயன்படுத்தவே செய்வார்கள். அதற்கு அடிக்குறிப்புகள் இடவேண்டும் என்பது ஒரு அபத்தமான கருத்தாகவே கருதப்பட்டது.

தமிழகத்தில் ஜனரஞ்சகமாக எழுதுபவர்களும் சஞ்சிகைகளை வெளியிடுபவர்களும் ஏன் சினிமா தொலைக்காட்சி படைப்பாளிகளும் கூட இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற தமிழர்வாழும் நாடுகளின் வியாபார சந்தைகளைப் பெருவாரியாக நம்பியிருக்கிறார்கள். இந்தப்படைப்புக்களின் தடை விதிக்கப்பட்ட காலங்களில் கூட கடத்தல் மூலம் இந்தச் சந்தைகளுக்கு அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அப்படி பார்க்கையில் அவர்கள்தான் தங்கள் வட்டார வழக்குகளுக்கு அடிக்குறிப்பு இடவேண்டும் ஆனால் அவ்வாறு இலங்கை வாசகர்கள் எதிர்பார்க்கவில்லை. அவைகளை வாசித்து அல்லது கேட்டு பார்த்து (வானொலி, தொலைக்காட்சி) விளங்கிக்கொள்ளாமலும் இருக்கவில்லை.

அந்தளவிற்கு ஈழத்து படைப்புக்கள் தமிழ்நாட்டுக்கு போகின்றவைகளன்றால் இல்லையென்பதுதான் மறுமொழியாக விருக்கும் அதேசமயம் தமிழ்நாட்டை ஒரு விற்பனைத் தளமாக இலங்கைத் தமிழ் எழுததாளர்கள் கருதுவதாகவும் இல்லை.

### படைப்பாளர்களுக்கு ஊக்கமளித்தல்

ஈழத்து எழுத்தாளர்கள் தமிழ் நாடு சந்தை விற்பனைகளை எதிர்பார்த்து எழுதுவதுமில்லை. ஆனால் மிகத்தரமான எழுத்துக்கள் வெளிவந்துள்ளன, வந்துகொண்டிருக்கின்றன இந்தநிலையில் இந்த எழுததாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் உரியமதிப்பும் அங்கீகாரமும் இங்கேயே கிடைக்கின்றவையென்றால் அதுவும் மகிழ்ச்சிதருவதாக இல்லை.

திருகோணமலையில் செயற்படும் மாகாணக்கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஒரு இலக்கியப் பரிசினை வருடந்தோறும் வழங்குவது ஒரு பாராட்டுக்குரிய விடயம்தான்.

படைப்பாளிகளுக்கு இதுவொரு ஊக்குவிப்பு பணிஎன்பதை மறுக்க முடியாது. ஆனால் பரிசுக்குரிய தொகைபற்றி அவர்கள் இன்னும் தாராளம் காட்டலாம்.

அவைகளை வெளியிடுவதற்கான செலவுகள பல மடங்காக அதிகரிப்பதனால் பரிசுத்தொகைகளை அதிகரிப்பது பற்றி ஆலோசிப்பது வரவேற்கத்தக்கது.

அத்துடன் கொழும்பு சாகித்திய மண்டலமும் ஒரு பரிசு வழங்குவதாகத் தெரிகிறது. ஆனால் அங்கே வழங்கப்படும் பரிசுபற்றி யும் பரிசுக்குரியநூல்கள் தெரிவு செய்யப்படும் முறைகள் பற்றியும் பல வித விமர்சனங்கள் வெளிவருகின்றன இந்தப் பரிசினைத் தெரிவு செய்யும் குழுவுக்குள்ளேயே பல குழறுபடிகள் இருப்பதாகக் கதைகள் உண்டு.

சிங்கள மொழி படைப்புக்களுக்கு எவ்வாறு பரிசுகள் வழங்கப்படுகின்றனவோ அதேவிதத்தில் தமிழ்ப் படைப்புக்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றனவா என்பது தெரியவில்லை.

தமிழ்ப் படைப்புக்களின் பரிசுகள் பெருமபாலும் புலம்பெயர்ந்த படையாளிகளின் படைப்புக்களுக்கே வழங்கப்படுவதாகவும் படைப்புக்களை தெரிவுசெய்கின்றவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து வெகுமதிகள் கிடைப்பதாகவும் ஊடகமொன்றில் ஒருதகவல் வெளிவந்திருந்தது.

பரிசு யாருக்கு அளிக்கப்படுகின்றது என்பதல்ல பரிசுக்குரிய நூல் எவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்றது என்பதும் தகுதியுள்ள நூலுக்கு வழங்கப்படுமானால் பிரச்சினைக்கு இடமில்லை.

இந்தப் பரிசுகள் தமிழ் இலக்கியத்தையும் அது தொடர்பான ஏனைய பிரிவுகளையும் வளர்க்கவும் அவைகளில் ஈடுபட்டிருப்பவர்களை ஊக்கிவிப்பதற்காவுமே உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் இத்துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் இணங்காணப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறார்களா என்பது கேள்விக்குரியதே.

இதுபற்றி இத்துறைசார்ந்த அன்பர்கள் (அக்கறையுள்ளவர்கள்) யாராலும் விரிவான ஆய்வு ஒன்றை நடத்தினால் பலவிடயங்கள் வெளிவரலாம். அப்படிச்செய்யும் ஆய்வாளர்க்கு பரிசுஒன்றை ஏற்படுத்தினாலும் நன்று .

எதுவானாலும் நம்நாட்டு எழுத்தாளர்-மூத்தவர்கள், இளையவர்கள் என்று பாராமல் அவர்களின் முயற்சிகளுக்காக பாராட்டப்படுவதும் ஊக்குவிக்கப்படுவதும் அவசியம்.

சாகித்திய மண்டலங்களும் அதுபோன்ற அரசுசார்ந்த அமைப்புக்கள் ஒருபுறமிருக்க தனித்துவமான வேறு அமைப்புக்கள் உருவாவது, உருவாக்கப்படுவதும் நல்லது.

எழுத்துத்துறை என்றில்லாமல் கலை படைப்புத்தொழில்லில் ஈடுபட்டுள்ளவர்கள் திட்மிட்டு சில அமைப்புக்களை உருவாக்கி செயலபட்டால் என்ன ஏனெனவே சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றன ஆனால் அவைகளில் வேலைத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை.

அதாவது ஆக்கத்துறையில் ஈடுபட்டுள்ளவார்களையும் ஈடுபட விருப்பம் கொண்டுள்ளவர்களையும் ஊக்குவிக்கும் செயற்பாடுகள் வெளிப்படவில்லை.

எந்தத்துறையாகவிருந்தாலும் ஒரு ஆக்கத்தை உருவாக்கமுனையும் படைப்பாளிக்கு நிதிவகையில் ஆதரவளிக்கும் ஒருஅமைப்பு இங்கிருப்பது அவசியம். நாட்டிலுள்ள நிதிநிறுவனங்கள் (வங்கிகள் போன்ற நிறுவனங்கள்கூட) சலுகை அடிப்படையில் இந்தப் படைப்பாளிகளுக்கு உதவலாம். மேலும் கல்வி அமைச்சு, கலாசார அமைச்சுக்கள் எழுத்தாளர்களின் படைப்புக்களை ஒரு குறிப்பிட்ட அளவில் கொள்முதல்செய்ய பாடசாலைகள் நூலகங்களுக்கு இலவசமாக வழங்குவதன் மூலம் எழுத்தாளர்களுக் ஊக்கமளிக்கமுடியும்.

நாட்டிலுள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை அவ்வப்போது இலக்கியப்போட்டிகளை நடத்தி வந்துள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற கதைகள எல்லாம் என்னவாயிற்று?

காலத்திற்கு காலம் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள இவைகளை நூல் உருவாக்க யாரும் முயன்றதாக தெரியவில்லை.

சுதந்திரன் பத்திரிகையில் வெளியான கதைகளை நூல்உருவாக்கி வெளியிட்ட பெருமைக்குரியவர் செங்கைஆழியான அவர்கள் அது ஒரு தனிமனித முயற்சி இம்மாதிரி சில நல்லகாரியங்களை அமைப்பு ரீதியாக யாரும் அக்கறையுள்ளவர்கள் செய்தால் என்ன?

இன்னும் சொல்லப்போனால் சிறந்த படைப்புக்கள் என்று தெரிவாகும் ஆக்கங்கள் தொகுக்கபட்டு வெளிவரவேண்டியது ஒருபுறம் இருக்க இந்தத் தொகுதிகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படுவது முக்கியம் ஈழத்து இலக்கிய ஆக்கங்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கப்படுவதன்மூலம் பிற நாடுகளில் இந்நாட்டுப் படைப்புக்களின் தனித்துவத்தை ஏனைய நாட்டவர்கள் புரிந்துகொள்ளச் செயயலாம் அவர்களின் பார்வையை இநதப் பக்கமும் திரும்பச் செய்ய முடியும்.

- அன்பன்

# 9 ஆயிரத்து 296 சிறார்கள் மந்த போஷாக்கினால் பாதிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் பயில்கின்ற 15 ஆயிரத்து 478 சிறுவர்களுள் 9 ஆயிரத்து 296 சிறுவர்கள் மந்த போஷாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட முன்பள்ளித் திட்ட அபிவிருத்தி நிலையத்தினால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மந்த போஷாக்கினால் பாதிக்கப்பட்டு இச் சிறுவர்களின் போஷாக்கு நிலையினை அதிகரிக்கச் செய்வதற்கு பரந்துபட்ட ரீதியில் போஷாக்குணவு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் முன்பள்ளித்திட்டங்களை நிர்வகித்து வரும் கிராமிய மட்ட நிறுவனங்கள் நிதிநெருக்கடிகளை எதிர் நோக்கிவருவதால் போஷாக்குணவு வழங்கும் திட்டத்தினை அமுல் செய்வதில் நெருக்கள் எதிர் நோக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. (உ-77)

## வடக்கு-கிழக்கில்

# காணிகள் பற்றிய எமது அணுகுமுறைக்கு புலிகள் எதிர்ப்புக் காட்டவில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் உள்ள காணிகள் தொடர்பாக நாம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு எமது நடவடிக்கைகளுக்கு அவர்கள் எந்தவித எதிர்ப்புமின்றி ஒத்துழைப்பு வழங்கிவருவது சமாதான முயற்சிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இவ்வாறு புத்தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணி இடம் பெயர் சேவையின் போது கலந்து கொண்டு உரையாற்றிய காணி அமைச்சர் ராஜிதசேனாரத்னா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்திருகோணமலை மாவட்டத்திலும் காணிப் பிரச்சினைகளை இனம காணும் பொருட்டு தேவையான தகவல்களை திருகோணமலை மாவட்ட அரச அதிபருடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளும் வழங்கி வருகின்றனர்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் எமது நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிவருவது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும் என்றார்.

(10)

**சிறுவிளம்பரம்**

**வியாழ மாற்றம்**

23.07.2003ல் வியாழன் மாற்றம் பலாபலன்கள் சோதிடஞானி சண் மாஸ்ரர் எழுதிய வியாழமாற்றப் பலன் நூல், பல பக்கங்களுடன் வெளிவந்து விட்டது. மற்றைய கிரகங்களின் பலன்களும் இடம் பெற்றுள்ளன. ரூபா-20, சண் மாஸ்ரர், மே/பா.மக்மிலன், யாழ்ப்பாணம். (7254)

## மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து மற்றுமொருவர் மேன்முறையீடு

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் வழக்கில் மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட மற்றுமொரு நபர் அத்தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட மூன்று கிராம வாசிகளில் ஒருவரே இந்த மேன்முறையீட்டைத் தாக்கல்செய்துள்ளார்.

இதேவேளை, இவ்வழக்கில் மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட பிந்துனுவெவ பொலிஸின் குற்றத் தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும், உதவி இன்ஸ்பெக்டர் இருவரும் தமது தீர்ப்பை எதிர்த்து ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இம் மூன்று மனுக்களும் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (தி)

# மன வடுக்களும் கலாசார சீரழிவுகளும் இன்றைய சமூகத்தை ஆக்கிரமிக்கின்றன

## பேராசிரியர் தயாசோமசுந்தரம் தெரிவிப்பு

(கோப்பாய்)

மனவடுக்களும் ,சமூக கலாசார சீரழிவுகளும் இன்றைய சமூகத்தை அச்சுறுத்தி வருகின்றன. இவற்றினால் பல விளைவுகள் ஏற்பட்டு வருவதை பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம்.

``சாந்திகம்'' உளவள பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற தொண்டர்களுக்கான சான்றிதழ்வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் தயா சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாந்திகம் தலைவர் என்.கனகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், உளரீதியில் பாதிப்புக்குள்ளானவர்களைத் தகுந்த ரீதியில் அணுகி, அவர்களை நற்பிரஜைகளாக்கி அவர்களையும் சமூக கட்டமைப்புக்குள் கொண்டு வர வேண்டும்.

கிராமிய ரீதியில் பயிற்சிகள் வழங்கி பல தொண்டர்களை உருவாக்கும் முயற்சியில்'' சாந்திகம் உள வளத்துணை நிலையம் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வகையில் கிராம ரீதியில் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்கு பொது அமைப்புக்கள் பின் நிற்கக்கூடாது.

தொண்டர்களால் தீர்வுகாண முடியாத பிரச்சினைக்கு அவ்வவ்துறை சார்ந்தோர் தக்க உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளனர்.மேலும் பல தொண்டர்கள் இந்த துறையில் ஈடுபடுவது அவசியமாகும் (க-79)

# யாழ்.குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் 9 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தஞ்சம்

## யாழ்.அரச அதிபர் ஆதாரத்துடன் எடுத்துரைப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட 124 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் 80 இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்றனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கடந்த வெள்ளியன்று அவரது அலுவலகத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள் தொடர்பாக அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிடுகையில்;

குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களைத் தவிர 19 ஆயிரத்து 324 குடும்பங்கள்; உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களின் வீடுகள், காணிகளில் தங்கியுள்ளனர். இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தான் தமது வாழ்க்கையை முன் நகர்த்தி வருகின்றன. இவர்களது நிலையங்கள் அமைக்கப்பட்ட காணிகள் பெரும்பாலும் தனியாரின் காணிகளாக இருப்பதால்.இவர்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதிகளையோ அல்லது மலசல கூட வசதிகளையோ செய்து கொடுக்க முடியாத நிலையே உள்ளது.

இவர்களை விட யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சேர்ந்த 20ஆயிரம் குடும்பங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்,வுவுனியா மற்றும் புத்தளம் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் இங்கு வருவார்களேயானால் இவர்களது தங்கும்இடங்களையும் அரச செயலகமே மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 22.02.2002ற்குப் பிறகு யாழ்.குடாநட்டில் இது வரை 44 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இத்தொகையில் சுமார் 40 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பானவாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும்.

இதற்கென புனர்வாழ்வு, புனரமைப்புஅமைச்சு 32 மில்லியன் ரூபாவை வழங்கியது. அதனைக்கொண்டு சுமார் 4ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிதி வழங்கப் பட்டது. ஆயினும் தற்போது இத் தகைய கொடுப்பனவுகளை வழங்கு வதற்கான நிதியை உலக வங்கி பல நிபந்தனைகளுக்கு மத்தியில் விடுவித்துள்ளது.

இதேசமயம் மீளக்குடியமர்வு கொடுப்பனவினை ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு மொத்த 300 மில்லியன் ரூபா தேவை என இனங்காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

.அபிவிருத்தித் திட்டங்களுக்கென 400 மில்லியன் ஆரம்பத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், இத் திட்டத்தின் வளர்ச்சியில் சில முக்கிய விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் கூட, சில தொழில் நுட்பக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு 80 மில்லியன் ரூபாவே இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குடா நாட்டில் நிலத்தின் கீழ் நீரை எப்படி சேமிக்கலாம் என்பது பற்றிய ஆய்வு முயற்சியில் நெதர்லாந்தைச்சேர்ந்த சிலர் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல கீரிமலை கடலேரி மற்றும் மணற்காட்டுப் பகுதியில் இருக்கும் நீரை எவ்விதம் குடிநீராக மாற்றலாம் என்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை பற்றியும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ். அரச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் பற்றி பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கென மாதத்தில் இரு தடவைகள் இவ்வாறான செய்தியாளர் மாநாட்டினை நடாத்துவதற்கு அரசாங்க அதிபர் சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க.77)



ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அப்பாவித்தனமாக சூட்டுக்கொல்லப்பட்ட யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவனின் 3வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி யாழ். வைத்தியசாலையில் இரத்ததானம் செய்யும் இந்துக்கல்லூரி மாணவர்களைப் படத்தில் காணலாம்.படம்: க.பவன்

# வலம்புரி நடத்திய தரம் 10 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி முடிவுகள்

*1ம் இடம் :செல்வி ச. சாருகேசி– இந்து மகளிர் கல்லூரி ,யாழ்ப்பாணம்.*
*1ம் இடம்: செல்வி அ. பிங்கலை– தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி ,தெல்லிப்பழை.*
*3ம் இடம்: செல்வி கு. மயூரி– கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலயம் காரைநகர்.*

## பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்

04. அசோகமாலா சிறிஸ்கந்த ராசா- யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி , உடுப்பிட்டி
05. நந்த குமார் கார்த்திக்- ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.
06. கோபால சர்மா ரகுவரன்- ஸ்கந்தவரோதயாகக் கல்லூரி கந்தரோடை ,சுன்னாகம்
07. லோகேஸ்வரன் குகதாஸ்-யா/மல்லாகம் மகாவித்தியாலயம் மல்லாகம்.
08. யாழினி பதுமநிதி- வடஇந்து கல்லூரி, பருத்தித்துறை.
09. துளசிகா பாலகுமார்- ஆரவங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
10. சா. சரிதா-கலாநிதி ஆ.தியாகராசா மகாவித்தியாலயம் காரைநகர்.
11. இராஜகோபால் ஜெகபரன்-யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்,மல்லாகம்.
12. ம.ரஜிதா-யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்.
13. ம.திருவேணி-தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை.
14. நிருஷா தியாகராசா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
15. யு. சரண்யா-யா/சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
16. த. பிறேமகாந்- மயிலிட்டி றோ.க. த.க பாடசாலை.
17. த. தர்சி- யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்.
18. நி. ஜெய்கரன்-யா/இந்துகல்லூரி யாழ்ப்பாணம்.
19. க.மாதுமை யா/ ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்.
20. சி. வலசி- கொக்குவில் இந்துக் கல்லூரி கொக்குவில்.
21. கௌசிகா செல்வரத்தினம் விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி.
22. நிரூபா- செல்வரத்தினம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
23. அ. பவித்திரா-யா/ கம்பர் மலை அ.த.க. பாடசாலை.
24. ஜெயராசா தவரூபன்- மல்லாகம் மகாவித்தியாலயம்.
25. கௌதமி- பாலசுப்பிரமணியம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
26. சிவசிதம்பரம் ஜனகன்-யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்
27. மிதுராஜெயேந்திரன்-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
28. அர்ச்சனா-குழந்தைவேலன் ஆவரங்கால்நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
29. கௌசிகா அருணகிரி நாதன்- ஆவரங்கால்நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
30. கீர்த்தனா கணபதிப்பிள்ளை- யா/ வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை.
31. சுகன்ஜா சிறிஸ்கந்தராஜா- கிளி. புனித திரேசா பெண்கள்கல்லூரி.
32. சுஜானி பாலகுமரன்-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி.
33. பவிதா தங்கவேல்- மல்லாகம் மகாவித்தியாலயம்.
34. மாதுரி சிறிகாந்தன் - மல்லாகம் மகாவித்தியாலயம்.
35. செ. நிறோஜினி- யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்
36. நகுலேஸ்வரன் கயூரன் யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
37. பொ. வனஜா-யா/சோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்.
38. கனிதா- திரவியம்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
39. சு. சுகந்தராசா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
40. அபிராமி- செல்வராசா -யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
41. லக்ஷ்மி எதிர்குலசிங்கம்-வேலணை வைத்திலிங்கம் ம.ம.வி வேலணை
42. சாந்தரூபி சுப்பிரமணியம்- மானிப்பாய் மகளிர் கல்லூரி
43. கோசலா-யா/ ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்
44. மயூரா மகேந்திரம்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
45. லொறென்ஸ் ஜெனற்செல்வி -சென்ஜேம்ஸ் உயர் தரப்பாடசாலை
46. காருண்யா கிருபாநிதி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
47. சி.சிவரூபினி-யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்.
48. எ. நிஷாந்தினி- யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
49. நந்துஜா-ஜேசுராசா- யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
50. றஜித்தா பழனிசாமி-அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி.
51. யோர்ச் ஜீவன் மகித்ரா- சென்ற் அன்ரனி றோ.க.பெண்கள் பாடசாலை
52. த. விமலதாஸ் -மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை ஆனைக்கோட்டை.
53. பத்மநாதன் பத்மன் மல்லாகம் மகாவித்தயாலயம் மல்லாகம்.
54. க. பாலவதனி-யா/ ஏழாலைமகாவித்தியாலயம்
55. பொன்னப்பா நிரோஜன்- கொக்குவில் இந்துக்கல்லூரி
56. பா. பாலசுதன்-யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்
57. துஷ்யந்தினி சின்னத்தம்பி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தியாலயம்
58. குமுதினி-சங்கநி-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
59. கிறன்சியா-யா/ சென் ஜேம்ஸ் மகளிர்கல்லூரி யாழ்ப்பாணம்.
60. சி. சுபிகா -ஏழாலை மேற்கு ஏழாலை.
61. யோகாசிவ உமாகரன்- ஏழாலை மகாவித்தியாலயம்.
62. செல்வறோகினி- யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
63. யோகனாதியாகராசா [illegible] தமிழ் கந்தையா வித்தியாசாலை.
64. சுரேகா தங்கவேலு -ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
65. சிந்துஜா அமிர்தலிங்கம்-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
66. செ. சசிகுமார் -கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் சுன்னாகம்
67. லோகரஞ்சன் ராஜி-யா/ ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்.
68. யூடித்ரேசா பிரான்சிஸ்சேவியர் -யா/திருக்குடும்பகன்னியர் மடம் யாழ்ப்பாணம்
69. வ.ஆ.தனேந்திரன்- நாமகள் வித்தியாலயம் கொக்குவில் கிழக்கு.
70. துஷ்யந்தினி மகேந்திரன்-மருதடி அறநெறி பாடசாலை மானிப்பாய்.
71. மு.முகுந்தன் யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.
72. றஜினா செல்வராஜா- யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
73. பா.நிதர்சன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
74. ஜோ. அ.வோல்டன் கமல்ஸ் -புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.
75. சி.மணிமாறன் மல்லாகம் மகாவித்தியாலயம்.
76. சௌ.கிரேகா- யா/விக்ரோரியாக்கல்லூரி சுழிபுரம்.
77. த.தர்சினி- மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்.
78. வி.விஜயசித்திரா -கண்டாவளை மகாவித்தியாலயம் கண்டாவளை.

**கட்டுரைப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் 20.07.2003 ஞாயிறு மு.ப. 10.30 மணிக்கு வலம்புரி கேட்போர்கூடத்தில் நடைபெறும். பரிசுக்குரியவர்களும்பாராட்டுச்சான்றிதழுக்குரியவர்களும் தவறாது வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

**ஞானகார்த்தம் மூத்த எழுத்தாளர் அமரர் கே. டானியல்**

**கட்டுரைப்போட்டியில் பங்கு கொண்டமாணவர்களுக்கும் அவர்களை வழி நடத்திய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் எமது நன்றிகள்.**

# யாழ் - தேசிய பாடசாலைகளின் மோசடி நாடகங்கள் அம்பலத்துக்கு

ஈழநாதத்தின் வாரமலரான வெள்ளி நாதத்தில் (11-17 ஜூலை 2003) வெளியாகிய இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

இக்கட்டுரையின் முழுத்தகவல்களும் ஈழநாதத்திற்கும் அதன் கட்டுரையாளருக்குமே உரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

- பிரதம ஆசிரியர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கட்டடகட்டுமாணத்தில் நடந்த மோசடி பாடசாலை மாணவர்களின் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.1990ல் இந்தப்பாடசாலையின் பழையமாணவர் சங்க நிர்வாகம் அமைக்கப்பட்டது. அது இது வரை மீளமைக்கப்படவில்லை. 1998இன் பின்னர் அதன் கூட்டமும் நடத்தப்படவில்லை. அதன் தலைவர்-கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒப்பந்தங்களில் மோசடிகளைப் புரிந்ததாக அம்பலப்படுத்தப்பட்ட முனனாள் அரசஅதிபர் சண்முகநாதன். செயலாளர் - யாழ்ப்பாணத்தின் பிரபலமான வித்தியாசமான ஊடகவியலாளர் வித்தியாதரன் போன்றோராகும்.

பாடசாலைக்கு 77லட்சம் ரூபா மதிப்பீட்டில் கட்டடம் ஒன்றை கட்டுவதற்காக ஒரு கோடி ரூபா செலவில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. பழைய மாணவர் சங்கமே ஒப்பத்தகாராகி, சோமசுந்தரம் என்பவரின் தலைமையில் கட்டட அமைப்புக் குழுவை அமைத்தது. 2000 ஜூனுக்குள் இக் கட்டடம் முடிக்கப்படவேண்டும்.

EPDPயின் டக்ளஸ் தேவானந்தாவுடன் இருந்த நெருக்கத்தை வைத்து அவரின் கட்டுப்பாட்டில் இருந்த 'RRAN'இன் நிதியை இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தலைவரான அரச அதிபர் சண்முகநாதனும், செயலாளரும் கட்ட அமைப்புக்காக எடுத்தனர். வேறு எந்தப் பாடசாலைகளுக்கும் இந்தளவு நிதிவழங்கப்படவில்லை. தாமே நிதியைப்பெற்று தமக்குள்ளேயே ஒப்பந்தகாரரையும் அமைத்து 85 லட்சம் ரூபா பணமும் இவர்களால் பெறப்பட்டுவிட்டது. ஆனால் கட்டடம் இன்னமும் முடியவில்லை. முடிந்த கட்டட வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் முடிந்த வேலையின் பெறுமதி 45லட்சம் ரூபாவாகும். மிகுதி 40லட்சம் ரூபாவுக்கான வேலை எங்கு என நலன் விரும்பிகள் கேட்கின்றனர்.

1998இன் பின் கூட்டப்படாத பழைய மாணவர் சங்கக் கூட்டத்தை கூடுமாறு யாழ. பல்கலைகழகத்தில் கல்வி பயிலும் 75பழைய மாணவர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினர். யாப்பின் படி 30உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கோரினால் சங்கம் கூட்டப்பட வேண்டும்.

ஆனால் சங்கத்தைக் கூட்ட பழைய மாணவர் சங்கம் தயாராக வில்லை எனத் தெரிவித்துள்ளது. உண்மை நிலையை உணர்நத பாடசாலையின் உயர்தர மாணவர்கள் 1500பேர் கையெழுத்திட்டு சங்கத்தைக் கூட்டுமாறு கேட்டுள்ளனர். ஆனால் சங்கம் கூட்டப்படவில்லை. இதை விட பாடசாலை சமயலறை கட்டட கேள்விப்பத்திரம் ஒன்று 4லட்சத்து 87ஆயிரம் ரூபா மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு பகிரங்க கேள்விக்கு விடப்படாமல் பாடசாலை உபஅதிபர் மற்றும் ஒரு ஆசிரியருக்கும் வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தக் கட்டடத்தை 3லட்சத்து 53ஆயிரம் ரூபா செலவில் செய்வதற்கு மற்றொரு நிறுவனம் தயாராகவிருந்தது.

இதற்கிடையில் அமெரிக்க பழையமாணவர் சங்கம் பாடசாலை பழையமாணவர் சங்கத்திற்கு 5000 அமெரிக்க டொலர்களை அனுப்பியிருந்தது. அதுபற்றி எந்தவித பதிலும் தமக்கு இல்லை என அமெரிக்க பழையமாணவர் சங்கம் கூறுகின்றது. அதேபோல் பிரிட்டன் பழையமாணவர் சங்கம் 23லட்ச ரூபாவை அனுப்பியிருந்தது. நீண்ட காலமாக இதற்கு என்ன நடந்தது என தெரியாமலிருத்தது. பிற்காலத்தில் பிரிட்டன் பழைய மாணவர் சங்கம் இது பற்றிக் கேள்வியெழுப்ப அப்போது தான் அப்பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது. அதுவரை அப்பணம்யாரிடம் வட்டிக்கு கொடுக்கப்பட்டது என நலன் விரும்பிகள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இந்த பழையமாணவர் சங்கத்து

**துரு. துரு. துருவன்**

டன் அதிபர் ஒத்துவராத காரணத்தால் அவரை மாற்றுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதிபரை விசாரிக்கவென அமைச்சிலிருநது குழு வநதது. ஆனால் குழுவை முன்னதாக அழைத்துச்சென்ற பழைய மாணவர் சங்கம் அவர்களுக்கு சிறப்பான விருந்தை வழங்கி கெளரவித்தது.

அதிபரை மாற்றசாட்சியளித்தவர் சங்கச் செயலாளரான பிரபல யாழ். ஊடகவியலாளர். இப்படியாக அடாவடிகள் அங்கு தொடர கட்டட மோசடி தொடர்பாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அறிக்கை ஒன்றை சிறிலங்கா புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு கொடுத்திருந்தார். அதில் யாழ். இந்துக்கல்லூரி ஒப்பந்தகாரராக யாழ். ப.நோ.கூ.சங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் ஒப்பந்தகாரர் பழையமாணவர் சங்கம் தானாம்.

இந்துக்கல்லூரி மட்டும்மல்ல-யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் EPDP டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து நடத்திய மோசடி நாடகங்கள் உள்ளன. அங்கும் பழைய மாணவர்கள் இரு கூறாகியுள்ளனர். நியாயங்கள் ஆவணங்களுடன் பழைய மாணவர்கள் கூட்டம் ஒன்று அங்கும் இருக்கின்றது. அது விவகாரம் மற்றொரு தடவை பார்க்கலாம்.

உண்மை-நேர்மையை போதிக்க வேண்டிய அல்லது போதிக்கும் பாடசாலைகள்-அதற்கு முரணாக செயறபடுவது எத்துணை சரியானது. இது விடயம் குறித்து பாடசாலை மாணவர்கள் கொதிப்புற்றும்- அச்சம் கொண்டவர்களாக அடங்கியிருக்கின்றனர்.

**நன்றி**
ஈழநாதம் (வெள்ளிநாதம்) வாரமலர்
11-17 ஜூலை 2003

## பன்னிரண்டு இராசிகளுக்குமான வியாழ மாற்றம்

## 23.07.2003 - 20.08.2004

(நேற்றைய தொடர்ச்சி....)

குருவகரம் ஆரம்பம் 15.01.2004 நிவர்த்தி 10.05.2004, குரு வக்ரக காலத்தில் பலன்கள் மாறி நடைபெறும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 23.07.2003 புதன்கிழமை மாலை வேளையில் உச்ச வீடான கடகத்திலிருந்து நட்பு வீடான சிம்ம ராசக்கு (மக நட்சத்திரம் 1ஆம் பாதம்) குருபகவான் இடம் மாறுகிறார். ஜூலை 7ஆம் திகதி வகரமடையும செவ்வாய்க்கிரகம் செப்டம்பர் 06 வக்ர நிவர்த்தி அடைகின்றது.

ராகு, கேது சஞ்சார பலன்களையும் கவனிக்க.

***கன்னி:*** (உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)

12இல் குரு நன்மையானதன்று. சனி பார்ப்பதால் தீமை குறையும். பொருட் செலவு, பிரயாணம் ஏற்படும். 8இல் ராகு 10இல் சனி உள்ள போது ராகுவை குரு பார்ப்பது நல்லது. நவம்பர் இறு திக்குள் கும்பத்து செவ்வாயை குரு பார்ப்பதால் விவாக அனு கூலம், பண வரவு, தந்தை மூலம் சொத்து சேரலாம். குருவக்ர காலப் பகுதியில் காரியங்கள் தாமதமாகும்.

***துலாம்:*** (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

இவ் ராசிக்காரர்களுக்கு வியாழ மாற்றம் அதிக நன்மைகளை ஏற்படுத்தும். குரு 11இல் வருவது இலாபஸ்தானம். 4,5ஆம் இடயோயஸ்தானம். சனி8இல் உள்ளதால் பொருள் இலாபம், நன்மை, நவம்பர் இறுதிவரை கும்பத்துசெவ்வாயை வியாழன் பார்ப்பதால் நன்மை ஏற்படும். அதிர்ஷ்டங்கள் ஏற்ப டலாம். மூத்த, இளைய சகோதரர் வழிகளால் நன்மை. 7இல் ராகு ஜென்மக் கேது ஏற்பட்ட போதும் குரு பார்வை காரணமாக ராகுவின் தீய பலன் குறையும். ஜென்மக் கேது காரணமாக உடல் நிலை பாதிப்பு ஏற்படும். குருவக்ரகாலப்பகுதி உடல்நலக் குறைவு ஏற்படும்.

***விருச்சிகம்:*** (விசாகம் 4, அனுஷம், கேட்டை)

சனி 8இல் 10இல் குரு கஷ்டமான பலன்கள் அதிகம். இடமாற்றம் பொருட்செலவு. தூரதேச பிரயாணம். தாயாருக்கு கஷ்டம். தொழில் முன்னேற்றம் உண்டு. சனிப்பார்வை காரணமாக குரு வின் பலன் குறையும். நவம்பர் இறுதிக்குள் 4இல் செவ்வாயை 10இல் உள்ள குரு பார்ப்பதால் வீடு, நிலம் சேர்க்கை, நவம்பர் ஜனவரி காலப் பகுதி மனக்கவலை. ராகு 6இல் வருவது நன்மை. ஜென்மக் கேது உடலைப் பாதிக்கும். குருவக்ர காலப்பகுதி உடல் நலம் ஏற்படும்.

***தனு:*** (மூலம், பூராடம், உத்தராடம் 1)

குரு 9இல் பாக்கியஸ்தானம். சனி 7ஸ்தானத்திற்குரிய இடம். சனி குருவையும் சந்திரனையும் பார்ப்பதால் நன்மை. அதிர்ஷ்டம், இலாபம், பிரயாணம், சகோதர உதவி கிடைக்கும். கும்பத்தில் உள்ள செவ்வாயை 9இல் உள்ள குரு பார்ப்பதால் நவம்பர் இறுதிக்குள் அதிர்ஷ்டமான காலம். பின் ஜனவரி வரை மனதில் விரோத உணர்வு மேன்படும். ராகு மாற்றம் தீமையை ஏற்படுத்தும. கேது இறைவழிபாட்டுக்கு கூடுதலான அக்கறையைக் காட்டச் செய்யும். குருவக்ரகாலம் கஷ்டமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்.

***மகரம்:*** (உதராடம் 2, 3, 4 திருகோணம், அவிட்டம் 1,2)

8இல் குரு மறைவுத் தானத்தில் உள்ளதால் நன்மைகளை எதிர்பார்கக முடியாது. 6இல் சனி உள்ளது நன்மையானது. சனி குருவை 3ஆம் பார்வையாகப் பார்ப்பதால் பாதிக்குக்கள் குறையும். பொருள் வரவு ஓரளவு உண்டு. சுபச்செலவு ஏற்படும். செவ்வாய் காரணமாக நவம்பர் இறுதிவரை நற்பலன்கள் குறைவு, ஜனவரி,மார்ச் பகுதியில் இடமாற்றம் ஏற்படலாம். ராகு காரணமாக குலதெய்வ வழிபாடு ஆர்வம் அதிகரிக்கும். கேது காரணமாக பெரியோர் ஆசி கிட்டும். குரு வக்ர காலப்பகுதி மகிழ்ச்சியாக இருக்கும். குருவின் 5ஆம், 7ஆம், 9ஆம் பார்வை காரணமாக புனி தல யாத்திரை,வாக்கு வல்லமை,வீட வாகன் சேருதல் ஏற்பட லாம். ராகுவை குரு பார்ப்பதால் கண்டங்கள் விலகும்.

***கும்பம்:*** (அவிட்டம் 3,4 சதயம் பூரட்டாதி 1.2.3)

7ல் குரு கேந்திர இடம் அதிர்ஷ்டமானது, 5இல்சனி திருப்தியற்ற பலன்கள், விவாகம் ஏற்படுவதற்கான காலம். செவ்வாய் 3இல் உள்ளதால் இளைய சகோதரரால் நன்மை. ஜனவரி, மார்ச் பகுதிக்குள் புத்திர பாக்கியம். பொருள் இலாபம், தொழில் முன்னேற்றம். வாக்கு வசீகரம். ராகு கேது மாற்றங்களினால் உடல் நலப் பாதிப்பு.உத்தியோத் துறையில் மன உளைச்சல் குரு வக்ர காலப்பகுதியில் மாமன வழியால் நன்மை.

***மீனம்:*** (புரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

6 குருசுமாரான பலன்கள். 11,12 இற்குரிய அதிபதி சனி 4இல் இருப்பது. தூரதேச பிரயாணத்தால் நன்மை ஏற்படும். செவ்வாய் மீது குரு பார்வை உள்ளதால் நவம்பர் இறுதிக்குள் இடமாற்றம். பின் ஜனவரி மார்ச் பகுதிக்குள் பொருள் இலாபம். குடும்ப முன்னேற்றம் தாயாருக்குப் பாதிப்பு, செப்டம்பர் பின் ராகு, கேது கிரகங்களால் நன்மைகளை எதிர்பார்க முடியாது. குரு வக்கிரகாலப்பகு தியில் அமைதியும் நிதானமும் முக்கியம்.

- முற்றும் -

## விமர்சனங்களுக்கு அஞ்சாத "ஸ்ரீவ்வோ"



அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டி

இவ்வாண்டின் இறுதியில் அவுஸ்திரேலியாவில் இந்தியாவிற்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிகளை தான் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டிகளின் தலைவரான "ஸ்ரீவ்வோ" கூறியுள்ளார்.

கிரிக்கெற் போட்டிகளில் இருந்து தன்னை ஒய்வு பெறுமாறு எழும் விமர்சனங்களை தான் பொருட்படுத தவில்லை எனவும் "ஸ்ரீவ்வோ" கூறியுள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந் இவர் கொல்கொத்தாவில் உதயன் சிறுவர் இல்லத்திற்குச் சென்றதுடன் சென்னையில் சிறிய ரக கார் பந்தயத்தையும் ஆரம்பித்துவைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

## வைத்திய ஆலோசனையால் தென்னாபிரிக்க அணிக்கு பேரிழப்பு

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான "நிக்கிபோயே" 4மாத காலங்களுக்கு கிரிக்கெற் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்ற மும்முனை கிரிக்கெற் தொடரில் இங்கிலாந்திற்கு எதிரான போட்டியிலே "போயே" அண்மையில் கணுக்காலில் காயமடைந்தார். இதனையடுதது கடந்த புதன் கிழமை இவருக்கு இரண்டரை மணி நேர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டதுடன்,இவர் 2மாதகாலம் காலில் கட்டுடன இருக்கவேண்டும் எனவும் அதன் பின் புனர்வாழ்வு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் எனவும் "நிக்கி போயே"விற்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இப்போட்டித் தொடரில் இவர் பங்குபற்றாது விடுவது தென்னாபிரிக்க அணிக்கு பேரிழப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (உ-68)

"கோல்வ்" தரப்படுத்தல்

## முதலாம் இடத்தை தக்க வைத்துள்ள டைகர்வுர்

கோல்வ் விளையாட்டின் உலக தரப்படுத்தல் வரிசையில் முதலாம் நிலையில் இருந்த டைகர்வூர் தொடர்ந்தும் அந்த இடத்தை தக்கவைத்து உள்ளார். இவர் 16.64 புள்ளிகளைப் பெற்று முதல் நிலையினை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தரப்படுத்தல் பட்டியலில் 2 ஆம் நிலையில் உள்ள தென்னாபிரிக்க வீரர் எட்னிஎல்ச் 9.24 புள்ளிகளையே பெற்றிருக்கின்றார். 8.2 புள்ளிகளைப் பெற்றுள்ள கனேடிய வீரர் மைக்வீர் 3ஆம் நிலையில் உள்ளார்.

இதேவேளை, 6 ஆம் இடத்தில் இருந்த "ஜீம்பியோரிக்" 4ஆம் இடத்திற்கு வந்துள்ளதுடன், 4ஆம் இடத் திலிருந்த "டேவிட்சிலாம்" 6ஆம் இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளார். பீஜங் வீரர் 'விஜயசிங்க' தொடர்ந்து 5ஆம் இடத்திலேயே உள்ளார். (உ-68)

## விளையாட்டு செய்திகள்

## தேசிய மெய்வல்லுநர் பயிற்றுனராக லஷ்மன் டீ அல்விஸ் தெரிவு

(கொழும்பு)

இலங்கையின்தேசிய மெய்வல்லுநர் பயிற்றுனராக 3வது தடவையாகவும் "லஷ்மன் டீ அஸ்விஸ்" தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மெய்வல்லுநர் விளையாட்டுத் துறையினை முன்னேற்றுவதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டி உள்ள தாக தெரிவிதுள்ள "லஷ்மன் டீ அஸ்விஸ்" சிறந்த மெய்வல்லுநர்களை உருவாக்கி இலங்கைக்கு புகழ் தேடிக்கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இவர் 30வருட உள்நாட் மற்றும் வெளிநாட்டு மெய்வல்லுநர் விளையாட்டுகள் தொடர்பான அனுபவம் நிறைந்தவர். இதுவரையும் இலங்கை விளையாட்டுத்துறை பிரதிப்பணிப்பாளரான "டேவின் பெரேரா" மெய்வல்லுநர் பயிற்றுனராக கடமையாற்றி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-68)

# பேருந்து ஆற்றில் வீழ்ந்து 16 பேர் பலி; 20 பேர் காயம்

## ஜம்மு-காஷ்மீரில் சம்பவம்


(சென்னை)

ஜம்மு-காஷ்மீரின டோறா மாவட்டத்தில் பேருந்து ஒன்று ஜகாத் நதியில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த16 பயணிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 20 பேர். காயமடைந்துள்ளனர்.

புல்டோறா என்னும் இடத்திற்க ருகில் உள்ள வளைவில் பேருந்து திரும்பிய சமயமே இந்தவிபத்து நேர்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த வர்களுக்கு அருகிலுள்ள மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவர்களது நிலமை கவ லைக்கிடமாகவே உள்ளதாக மருத்து வமனை வட்டாரங்கள் கூறுகின்றன.

நதியில் வீழ்ந்த பேருந்துவிபத் தில் உயிரிழந்தவர்களை மீட்கும் பணிகளை பணியாளர்கள் கடும் பிரயத்தனமெடுத்து மேற்கொள் வதாகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிக ரிக்கக் கூடுமென அச்சம் தெரிவிக் கப்படுகின்றது. இதேவேளை, இப் பகுதியில் பேருந்து விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதாகவும், பூரண பாதுகாப்பு வசதிகளும், விபத்துக் களைத் தடுப்பதற்கான நடவடிக் கைகளும் குறைந்து காணப்ப டுவதே இவ்வுாறான விபத்துக்கள் அதிகரிப்பதற்கான காரணம் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.(பி-2)



புதுடில்லி-லாகூர் இடையிலான பேருந்துப் போக்குவரத்து கடந்த 18 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் தொடங்கியது. தில்லியிலுள்ள அம்பேத்கர் பேருந்து நிலையத்தில் மத்திய தரைவழிப் போக்குவரத்து துறை அமைச்சர் பி.சி.கந்துரி கொடியசைத்து போக்குவரத்தை ஆரம்பித்து வைக்கின்றார்.

## கைதான அரச ஊழியர்கள் படிப்படியாக விடுவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் உயர் நீதிமன் றின் உத்தரவிற்கேற்ப தமிழகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான அரச ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அரசிற்கு எதிராகப் போராட்டம் நடத்தியதால் கடந்த 2ஆம் திகதி யிலிருந்து பெரும் எண்ணிக்கை யிலான அரச ஊழியர்கள் அத்தி யாவசியப் பணிகள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, அரச ஊழியர் களை விடுவிக்குமாறு கடந்த இரு நாட்களுக்கு முன்னர் உயர் நீதி மன்றம் உத்தரவிட்டதையடுத்து ஆயிரம் ரூபா காசுப் பிணையில் அவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக் கப்பட்டு வருகின்றனர்.

இதனிடையே தனிப்பட்ட கார ணங்களால் இவர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்று விளக்க மளிக்கும் அரச ஊழியர்கள் மீண் டும் அவர்களது பணியில் இணைய அனுமதிக்கப்பட்டு வருவதாகக் கூறப் படுகின்றது. (பி-2)

## ஆபிரிக்காவிலிருந்து யுரேனியம் பெற ஈராக் முயன்றது: பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தல்

(லண்டன்)

ஆபிரிக்காவிடமிருந்து ஈராக் அணுவாயுதங்களைத் தயாரிப்பதற் குத் தேவையான யுரேனியத்தை பெற முயன்றதாக பிரிட்டன் தெரி வித்த கருத்துக்களை மீண்டும் வலி யுறுத்தியுள்ளது.

பிரிட்டனின் உளவுத்துறையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் யுரேனியம் தொடர்பான விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரிட் டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜெக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்விடயத்தில் அமெ ரிக்காவின் கருத்துக்கள் உள்ளடக் கப்படவில்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ஆபிரிக்காவிலி ருந்து யுரேனியம் என்னும் உலோ கப் பொருளைக் கொள்வனவு செய்ய ஈராக் உத்தேசித்திருந் ததாக தவறான தகவலொன்றைத் தாம் வெளியிட்டுள்ளதாக அமெ ரிக்க சி.ஐ.ஏ. அமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

தமது தவறான தகவல் கார ணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் விசேட உரை யொன்றையும் நிகழ்த்த வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் சி.ஐ.ஏ. அமைப்பின் பணிப்பாளர் ஜார்ஜ் ஜெனற் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஆற்றிய விசேட உரையில் ஆபிரிக்காவிலி ருந்து யுரேனியத்தை ஈராக் கொள் வனவு செய்ததாக குறிப்பிட்டி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

## திருமணம் ஆனதின் பின் விஞ்ஞானிகளுக்கு ஆய்வில் ஆர்வம் குறைந்துவிடும்

(பரிஸ்)

விஞ்ஞானியாக இருந்தாலும், கிரிமினல்களாக இருந்தாலும் அவ ரவர் துறையில் நாட்டம் வெகு வாகக் குறையும் என்று ஓர் ஆய் வின் மூலம் தெரியவந்துள்ளது.

நியூசிலாந்தில் உள்ள காண் டர்பரி பல்கலைக்கழகத்தின் உள வியல் துறை நிபுணர் சதோஷி கனாஜாவா சமீபத்தில் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

இதற்காக 280 பிரபல விஞ்ஞா னிகளின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்தார் சதோஷி.

ஆய்வுகள் நடத்தி பல அறிவி யல் உண்மைகளை கண்டுபிடித்த விஞ்ஞானிகள் அனைவருமே 30-35 வயதுக்குள் தான் சாதனை புரிந்துள்ளனர். அதற்கு மேல் ஆய்வு கள் நடத்தி புதிய கண்டுபிடிப் புக்களை விஞ்ஞானிகள் கண்டுபி டித்ததாக வரலாறு இல்லை என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

வயதானால் அறிவியல்களும் கண்டுபிடிப்புக்களும் மங்கும். பெரும்பாலான விஞ்ஞானிகள் 30-35 வயது வரைதான் புதிய பொருள் களை கண்டுபிடித்துள்ளனர் என்று சதோஷி கூறுகிறார்.

எந்த வயதினராக இருந்தாலும் திருமணத்திற்குப் பின்பு அறிவியல் ஆய்வில் விஞ்ஞானிகள் நாட்டம் காட்டவில்லை. ஆய்வுகளுக்கு டாடா காட்டிவிட்டு குடும்பத்தைக் கவனிப்பது, குழந்தைகளைப் பெற்று அவர்களது முன்னேற்றத் தில் கவனத்தைச் செலுத்துவதில் நாட்டத்தைச் செலுத்துகின்றனர்.

ஆனால் திருமணம் செய்து கொள்ளாத விஞ்ஞானிகள் தொடர்ந்து அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டு புதிய கண்டுபிடிப்புக்களை கண்டு பிடிக்கின்றனர் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்ல இது இசைக் கலைஞர்கள், ஓவியர் கள், எழுத்தாளர்கள் மற்றும் கிரிமி னல்களுக்கும் பொருந்தும் என்றார் சதோஷி. (பி-2)

உலக தரிசனம்



செல்போன்களின் பாவனை உயர்ந்து வருகின்றது. ஏற்கனவே செல்போன் சிறிய கணிப்பொறி போன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதில் தற்போது தொலைக்காட்சியும் அறிமுகப்படுத்தியுள்ளது ஒரு நிறுவனம். ஆனால், இதன் விற்பனை இன்னும் தொடங்கப்படவில்லை. இதே போன்ற செல்போன் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

## அயோத்தியில் உரிமை கோருவதை கைவிடக் கோருகிறது வி.எச்.பி

(சென்னை)

அயோத்தி மீது உரிமை கோரும் போக்கைக் கைவிடுமாறு முஸ்லிம் தரப்பினருக்கு விஷ்வ ஹிந்துப் பரிசத் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளி யிட்டுள்ள விஷ்வ ஹிந்துப் பரிசத் தின் தலைவர் அசோக்ஷிங்கல் அயோத்தி, காசி மற்றும் மதுரா ஆகிய நகரங்களிலுள்ள மசூதி களை முஸ்லிம்கள் கைவிட்டு இந் துக்களுடன் நல்லுறவினை ஏற்ப டுதிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

முஸ்லிம்கள் இறுகிய போக் குடன் செயற்படக்கூடாது என்றும் அயோத்திப் பிரச்சினையில் எந்த வித சமாச்சாரத்திற்கும் இடமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அயோத்திப் பிரச்சினை தொடர் பான வழக்கு நிலுவையிலுள்ள நிலையில் விஷ்வ ஹிந்துப் பரிஷத் இவ்வாறு கருத்து வெளியிடுவது பிரச்சினைத் தீர்விற்கு உதவியாக அமையாது என்று முஸ்லிம் அமைப் புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நல்லநாள் பார்த்து அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்டப் படும் என்றும் இதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை என்றும் விஷ்வ ஹிந்துப் பரிஷத் அறிவித் துள்ள தனது பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிடும் என்று அஞ்சப்படுகின்றது. (பி-2)

## முதல்வர்பற்றிய செய்திகளை வெளியிட 'நக்கீரன்' இதழுக்குத் தடை

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெய லலிதா பற்றிய செய்திகளை பிரசு ரிப்பதற்கு நக்கீரன் இதழுக்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலி தாவும் அவரது தோழி சசிகலாவும் மதுபானக் கடைகளையும் தொழிற் சாலைகளையும் தமிழகத்தில் இயக்கிவருவதாக நக்கீரன் இதழில் தொடர்ச்சியாக வெளியாகிய செய் திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று தெரிவித்து 2கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களை விமர்சிப்பது தவறல்ல எனவும் ஆனால் அவர் களின் சொந்த வாழ்க்கை குறித்து செய்தி வெளியிட முன்னர் அவர் களிடம் விளக்கம் கேட்க வேண்டும் எனவும் கூறியதுடன் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா ஆகியோரது தனிப்பட்ட செய்திகளை வெளியி டுவதற்கு இரண்டு வாரங்களுக்கு நக்கீரன் இதழுக்குத் தடை விதித் துள்ளார். (உ-2)

## விளம்பரத்தில் புத்தர்படம்

(புனே)

பால் உணர்வைத் தூண்டும் மாத்திரை விளம்பரத் துண்டுச் சீட்டின் மீது புத்தர் படத்தை பிரசு ரித்ததால் வன்முறை ஏற்பட்டது. இச்சம்பவம் மகாராஷ்டிர மாநில புனே நகரில் சனிக்கிழமை நடந் ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புனேயில் டாடிவாலா மற்றும் தோல் பாட்டீல் சாலைப் பகுதி களில் மக்கள் கல்வீச்சில் ஈடுபட் டனர் இதில் பல வாகனங்கள் சேத மடைந்தன. பெற்றோல் நிலை யமும் சேதமடைந்தது. (பி)

## இடுப்பில் ஒட்டிப் பிறந்த இவர்களுக்கு 34 வயது

(அகமதாபாத்)



முப்பத்து நான்கு ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர் மேற்கு வங்கத்தில் இடுப்பு ஒட்டிப் பிறந்த கங்காவும் ஜமுனாவும்.

தலை ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டைப் பெண் கள் அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கப்பட்டு சிறிது நேரத்திலேயே உயிரிழந்த சம்பவம் கண் ணில் இருந்து மறைவதற் குள் இந்த இரட்டையர் பற்றிய தகவல் வெளியாகியுள் ளது.

நான்கு கைகள், இரண்டு தலைகளுடன் இடுப்பு ஒட்டிப் பிறந்த இவர்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்துள்ளனர்.

அகமதாபாத்தில் நடந்துவரும் 'ட்ரீம்லேண்ட் எஸ்எல் வேர்ல்டு' கண்காட்சியில் கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக இம்மாதம் 8ஆம் திகதி இவர்கள் இருவரும் தங்களது கலைக் குழுக்களுடன் வந்திறங்கினர். அது முதற்கொண்டே இவர்கள் வயிற்றுப் போக்கு நோயால் அவதிப்பட்டு வருகின்றனர்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு ஈரானிய இரட்டையர்கள் உயிரிழந் துள்ளது அறிந்து இவர்கள் இருவரும் மிகவும் கவலைப்பட்டனர்.

காவிரிப் பிரச்சினை குறித்து தென்னிந்திய நடிகரும் நடனக் கலைஞருமான பிரபுதேவா எடுத்த 'ஓய்2கே' குறும்படததில் இவர்கள் நடித்துள்ளனர்.

இருவரும் எவ்வித அச்சமும் இன்றி காமிரா முன்பு நடித்ததை பிரபுதேவா பாராட்டியுள்ளார் என்று அவர்களது மேலாளர் அஞ்சன் குமார் கூறினார்.

இந்த இரட்டையர்களில் கங்கா எப்போதும் ஜாலியாகவும், ஜமுனா எப்போதும் கவலையுடனும் காணப்படுவார் என்றார் குமார். (பி)

அறிவின்மை இன்மையுள் இன்மை
பிறிதின்மை
இன்மையா வையாது உலகு
-குறள்

# வலம்புரி

## தினேஷின் அக்கறை

விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்க முன்னர் வடக்குக்கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள் சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

வடக்குக்கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தாமல், இடைக்கால சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்கக் கூடாது. இவ்வாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனா. அவரின் கோரிக்கை விசித்திரமானது மட்டுமல்ல அவர் ஓர் இனவாதி எனவும் தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

வடக்குக்கிழக்கை தமது தாயகமாக கொண்ட தமிழ் மக்கள் தமது இல்லிடங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களிலும் குடிசைகளிலும் காலம் கழிக்கின்றனர். அத்துடன் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கும் இராணுவம் தடைவிதித்துள்ளது. இவ்வாறு வடக்குக் கிழக்கு வாழ் தமிழ்மக்கள் சொல்லணாத் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றபோது தினேஷ் குணவர்த்தனா சிங்கள மக்களின் உரிமை எனக்கோஷம் போடுவது சிங்கள மக்களிடையே இனவாதத்தை தூண்டும் நோக்குடையது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இனமத பேதங்கள் கடந்து உண்மையை உண்மையாக பேசவேண்டும் அத்தகைய சூழ்நிலை ஏற்படும் போதுதான் இலங்கைத் தீவில் இனவாதத் தீ தணியும்-இதனை விடுத்து ஏதோ சிங்கள மக்களில் தாம் அக்கறை கொண்டதாகக் காட்டிக் கொண்டு இனவாதத்தை வளர்ப்பது இந்நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கு வழிவகுக்குமே ஒழிய அது அமைதிக்கும், சமாதானத்திற்கும் வழிகோலாது

ஒருமொழி என்றால் இரு நாடு, இருமொழி என்றால் ஒரு நாடு என்ற கொல்வின் ஆர்.டி சில்வாவின் தத்துவத்தை தினேஷ் குணவர்த்தனா போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு இனத்தின் உரிமைமட்டுமென்றால் அது இரு நாட்டைத் தோற்றுவிக்கும். சிங்களவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறும் தினேஷ் குணவர்த்தனா சிங்களவர்களுடன் சேர்ந்து தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறியிருந்தால் ஓர் தகுதியான பாராளுமன்ற உறுப்பினராக அவர் கருதப் பட்டிருப்பார். இதை விடுத்து இனத்தின் பேரால் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் செயற்படுவது இத்தேசத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

# சொல்லொணா துயர்கொண்ட மக்களுக்கு நல்லன வெல்லாம் தரும் நாகம்மாளே

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதி நயினையம்பதியாகும். சப்ததீவுகளில் ஒன்றாக வையகமெங்கும் புகழ்பூத்து நிற்பதும் இப்பதியாகும். 'மணிமேகலா' தெய்வம் இப்பதிக்கு வந்து சென்றதால் 'மணிபல்லவம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது இப்பதி. அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றான 'புவனேஸ்வரி பீடம்' என்று அழைக்கப்படுவதும் இவ்வாலயமாகும். அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய கோபுர வாயல் அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவரும் அடியவர்களை தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அடியார்கள் 'அரோகரா' என்று வந்து கால்பதிக்கின்ற இறங்குதுறை நயினையம்பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத்தோற்றமாகும்.

அழகுக் கொருவரும் ஒவ்வாத ஆனந்தவல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி அருளாட்சி நடாத்துகின்றாள். தேவி பக்தரான அபிராமப்பட்டர் தனது முதற் பாடலிலேயே அன்னையின் அருளொழுகு வடிவத்தை வர்ணிக்கின்றாா.

'உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்
- உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது
- மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும
- தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன்
- விழுத்துணையே'

உலகிற்கெல்லாம் இருள்கடிய இளஞாயிறு உதயமாவதைப்போல மணிபல்லவத்தில் நாகம்மை அரசாட்சி போற்றப்படுகின்றது. மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்து சென்னி, குனிதரும் சேவடியைத்தந்து-துணையும் தொழும் தெய்வமுமாய் அருட்பார்வை நல்கி அனைவரையும் புனிதராக்குகின்றாள. நெஞ்சக்கனகல்லை உருகச் செய்து, வஞ்சப்புலன் ஐந்தின் வாய்களை அடைக்கின்றாள். வருந்து வரும அடியவர்க்கு வேண்டத்தக்கது அறிந்து வேண்டுவதும் கொடுக்கின்றாள்.

நாடிவரும் அடியார்களின் வினைகளையெல்லாம் தீர்ப்பவள் அன்னை. ஆசைக்கடலில் அகப்பட்டு அலைவோருக்கு வாசக் கமலங்களை தலைமேல்வைத்து அருள்நேசக் கரங்களை நீட்டி நிம்மதி தருகின்றாள்.

இவ்வாலயத்தைப் பற்றிய சரித்திரக்கதைகள் பலவாறு உள்ளன. இவற்றுள் ஒன்றை நோக்குவோம். நாகம் பூசித்தமையால். நாகேஸ்வரி யென்றும் பெயர் அமைந்தது என்பதும் சான்றோர்கள் கருத்தாகும். நயினாதீவுக்கு வடக்கேஉள்ள புளியந்தீவில்இருந்து நாகம்ஒன்று ஒவ்வொருநாளும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவில் அம்மையை வழிபட்டு வந்தது. ஒருநாள் பூக்கள் கொண்டுவரும் வழியில் ஒரு கருடன் அதனை வழிமறித்து கொல்லுவதற்கு முயன்றது. நாகம் பயந்து

**நா.க.குமாரசூரியர் ஜே.பி.**
**(அஞ்சலதிபர், நயினாதீவு)**

கடல்நடுவில் இருந்த கல்லொன்றில் சுற்றிக்கொண்டது. கருடனோ விலகிப் போகாமல் மற்றொரு கல்லில் அமர்ந்துகொண்டது. நாகத்தைக்கொல்லச் சந்தர்ப்பத்தை பார்த்துக்கொண்டிருந்தது கடல்வழியாகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த வணிகன் ஒருவன் இக்காட்சியைக் கண்டான். அவன் பாம்பின் மீது இரக்கம்கொண்டு அதனைக் கொல்லவேண்டாம் எனக் கருடனை வேண்டினான். அதற்கு கருடன் 'நீ உன்னிடம்இருக்கும்செல்வம் அத்தனையையும் கொண்டுவந்து நாகேஸ்வரிக்குக் கோயில் அமைப்பாயானால் நான் நாகத்தைக் கொல்லாது சென்று விடுகின்றேன் என்றது. வணிகனும் சம்மதித்து உறுதியளிக்க அது நாகத்தைக் கொல்லாது விலகிச் சென்றது.

வணிகன் தன் நாடுசென்று. நடந்தவற்றை தன் மனைவிக்குச் சொன்னான். இருவரும் இரவில் நித்திரைக்குச்செல்லும்போது. கணவன், மனைவி இருவரது கண்களையும் கூசவைக்கும் பேரொளி அறையில் தோன்றியது. விலை மதித்தற்கரிய நாகரெத்தினக் கல்லில்இருந்து தோன்றிய ஒளி என்பதை அறிந்துகொண்டார்கள் நாகேஸ்வரியின் நல்லருளை வியந்து நயினாதீவுக்கு வந்து அழகியதோர் ஆலயம் அமைத்தார்கள். மேற்குறித்த கதைக்குச்சான்றாக ஆலயத்தின் வட கடலில் இருகற்கள் இப்பவும் காணப்படுகின்றன. அவை இரண்டும் 'பாம்பு சுற்றிய கல்' 'கருடனிருந்த கல்' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன.

'ஓம் சக்தி' என கடல் அலைகள் அரவணைக்க உதய சூரியனின் பொற்கதிர்கள் கோபுரத்தின் மீது ஒளிவீச நயினையில் அருளாட்சி செய்து வருகின்ற அன்னை நாகபூஷணியே ஆவாள். □

# சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் என்றும் சேவைமனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட நீதிபதி. ஆர்.ரி விக்னராசா கருத்து

(தென்மராட்சி)

சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் தெய்வ சிந்தனையுடனும் சேவை மனப்பன்மையுடனும் அவற்றினை நடத்தல் வேண்டும். சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் கோபப் படுவதற்கே அல்லது கஷ்டப்படுவதற்கோ நியாயமில்லை.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் ஆர்.ரி விக்னராசா. கடந்த சனியன்று யாழ் வீரவிசிங்க மண்டபத்தில் சிறுவர் இல்லங்களை நடத்தும் தலைவர்களுக்கான கலந்துரையாட்லின் போது மாவட்ட நீதிவான் பங்கு கொண்டு உரை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் தலைவரும் உளவியல் மருத்துவத் துறை பேராசியருமான தயா சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட நீதிவான் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது;

நாம் எல்லோருமே மனிதர்கள். நாம் பிழைகள் விடலாம். ஆனால் சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாகச் செய்யும் பணிகளை சரியாகவும் பொறுப்பு உணர்வுடனும் சட்டத்தின் கூட்டுப் பொறுப்புணர்வை உணர்ந்து செயற்பட வேண்டும் அத்துடன் சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் நாம் சிறுவர் இல்லங்களில் இருக்கக் கூடிய பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் அல்லது இலங்கையில் சிறந்த நிர்வாகத்தை மேம்படுத்த எல்லோரும் பாடுபட வேண்டும். சிறுவர் இல்லங்களில் ஆண்பிள்ளைகளையும், பெண் பிள்ளைகளையும் தனியாக வைத்துப் பராமரிக்க வேண்டும் தவறுகள் இடம் பெறுவதற்கு நாம் உடந்தையாக இருக்கக்கூடாது.

சிறுவர் இல்லங்களை பதிவு செய்ய வேண்டுமா? இல்லையா? என்ற சர்ச்சை இப்போது எழுந்துள்ளது. சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாது விட்டால் அங்கு குற்றவியல் பிரச்சினைகள் எழும் போது பதிவு ஒரு முக்கியமான விடயமாக எழும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று பூகோள மயமாதலின் கீழ் உலகம் கிராமமாக மாறி வருகிறது அதற்கு இசைவாகவே எமது செயற்பாடுகனை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு எழுகின்றது எனக்குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினரான சட்டத்தரணி செல்வி காந்தா அபிமன்யு அங்கு குறிப்பிடும்போது யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற சிறுவர் இல்லங்கள் தம்மை எமது குழுவிடம் பதிவு செய்து கொள்ளாமல் இருப்பது பல்வேறு சந்தேகங்களை தோற்றிவிக்கின்றன. இல்லங்களைப் பதிவு செய்வது சட்டத்துக்கு விரோதமான செயலென்று எண்ணக் கூடாது.

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுஎன்பது சட்ட விரோதமான குழு அல்ல இது போன்ற அமைப்பு நாடு முழுதும் உள்ள மாவட்டங்களிலும் இருக்கின்றன. எமது மாவட்டத்தில் இயங்குகின்ற சிறுவா இல்லங்களின் நிலைப்பாடுகளை மேம் படுத்துவதற்கே நாம் விரும்புகின்றோம் என்றார்.

யாழ்மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் தலைவர் பேராசியர் தயா சோமசுந்தரம், சிறுவர் நன்நடத்தை அதிகாரி திருமதி எஸ்.சிவராஜா உட்பட பலரும் உரையாற்றினர். (க-77)

# பரீட்சை செயற்குழு அமைக்க கல்வி அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

பாடசாலைகளில் நடை பெறும் முக்கியபரீட்சைகள் தொடர்பான முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பரீட்சை செயற்குழு வொன்றை அமைக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தை பணித்துள்ளார்.

5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை உட்பட, கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சை, கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சை ஆகியன முக்கிய பரீட்சைகளாக விளங்குகின்றன.

இந்நிலையில் இந்தப் பரீட்சைகளுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் மற்றும ஊழியர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் பரீட்சை அதிகாரிகளை நியமிப்பதில் முறைகேடுகள் இடம் பெற்று வருவதாகவும் இதனால் ஆசிரியர்கள் மிகவும் பாதிப்படைகின்றதாகவும் எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இதனைக்கருத்தில கொண்டே முறைகேடுகளைத் தவிர்கும் பொருட்டு இப்புதிய செயற்திட்டங்களை அமைக்கத் தீர்மானித்துள்ளது என்றார். (க-10)

## திைசரி தியானம்

### நிலையான அழகு

பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்குவதைப் பாருங்கள். ஒவ்வொன்றும் தனித்தனியான உருவத்தையும் நிறத்தையும் வாசனையையும் பெற்றிருக்கின்றன. ஆனால் அவற்றின் அழகு நேற்றும் இன்றும் நாளையும் ஒன்றே. அது மாறுவதில்லை. நிலையான இந்த அழகு நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து உலகைக்கடந்து செல்லும் உயிர் மூச்சாகும். இது எல்லாப் பொருள்களிலும் இருக்கிறது. சில சமயங்களில் நமது உள்ளம் அன்பினாலும் கருணையாலும் எழுச்சியுறும்போது அது ஒளி பெறுவதைக் காணலாம். நமக்காக உலகுக்கு ஒளியூட்டும் இந்த அழகே நிலையானது.

**சுவாமி சிவானந்தர்**

# ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்படும்

(கொழும்பு)

ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் வஜிரா அபயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதன்படி ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்டு நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகளை இன்னும் ஒரு மாதத்திற்கிடையில் வழங்கவுள்ளதாக அவர் மேலும தெரிவித்தார். (க-10)

## நூலகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி எதிர்வரும் 16,17ஆம் திகதிகளில் கொக்குவில் பொது நூலகத்தில் நூலகக் கண்காட்சி இடம் பெறவுள்ளது. (உ-8)

# பாடசாலைகளில் ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த விஷேட திட்டம்

(கொழும்பு)

பாடசாலைகளில் ஆங்கில மொழியின் தரத்தை உயர்த்துவதற்கு தேசிய கல்வி நிறுவகம் செயல்திட்டமொன்றை வகுத்துள்ளது.


ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் மொழித்திறன் ஏற்புடைய மட்டத்தில் இப்பொழுது இல்லாததை கருத்தில் கொண்டே உலக வங்கியின் உதவியுடன் இப்பாடநெறியை ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடத்தவுள்ளதாக கல்வியமைச்சின் பணிப்பாளர் நாயகம் குணவர்த்தன தெரிவித்தார்.

ளுக்கு ஒரு பாடநெறியும் 5-11 தர வகுப்பு ஆசிரியர்களுக்கு இன்னொரு பாடநெறியும்,உயர் தர வகுப்பு கற்பிக்கும ஆசிரியர்களுக்கு இன்னொரு பாடநெறியும்,கல்வியியல் கல்லூரி ஆசியரியர்களுக்கு இன்னொரு பாடநெறியுமாக மொத்தம் 4 பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படும்.

18 மாதங்கள் எடுக்கும் இப் பாடநெறி டிசம்பர் 2004ல்முடிவடையும் எனவும் வலய கல்வி பணிப்பாளர்கள் மூலம் இவற்றிற்கான தேர்வு நாடிகள் தெரிவு செய்யப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு தனிசுயாட்சி

## அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை



(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங் களில் முஸ்லிம் மக்கள் செறிவாக வாழுகின்ற பகுதிகளுக்கு சுயாட்சி உரிமை ஏற் படக்கூடிய நிலைமை எதிர் காலத்தில் உருவாகக் கூடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த அமைச்சர் ஹக்கீம் அங்கு இடம் பெற்ற வைபவம் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

முஸ்லிம் மக்களின் கருத்துக்களை எடுத்துக் கூறக் கூடிய உயர் பீடம் ஒன்று அவசியம் அமைக்கப்பட வேண்டும் ஒரு கட்டமைப்பின் கீழ் இரு சம அளவிலான சுயாட்சி முறை முஸ்லிம் மக்களுக்கென உருவாக்கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கையாகும் இதனை அரசாங்கம் ஏற்றுக கொள்ளும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(வ)

## நினைவு நிகழ்வுகள் நாளை

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 14 ஆம் திகதி சர்வதேசக்கடலில் வீரகாவியமான லெப்.சீலன், வீரவேங்கை ஆனஞ் ஆகியோரின் இறுதி அஞ் சலி நிகழ்வு நாளை மாலை 5.00 மணிக்கு மீசாலை அல்லா ரையில் உள்ள லெப். சீலன் நினைவுத் தூபியில் இடம் பெற வுள்ளது.

அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து நினைவுரைகள் மற்றும் இன்னிசை கானங்களும் இடம் பெறும்.

**லெப்.கேணல் கதிர்**

லெப்.கேணல் என அழைக்கப்படும் செல்வரத்தினம் சசிந்திரனின் இறுதி அஞ்சலி நிகழ்வு சாவகச்சேரி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத் தில் நாளை நண் பகல் 12.00 மணிக்கு இடம் பெறும். இதனைத் தொடர்ந்து கொடிகா 'மம் மாவீரர் துயிலும் இல்லத் தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படும்.

**வீரவேங்கை தமிழீரான்**

முல்லைத்தீவில் இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத் தில் வீரச்சாவடைந்த வீரவேங்கை தமிழீரானின் (இரத்தினம் சிவ சங்கர்-சுன்னாகம்) இறுதி அஞ் சலி நிகழ்வு நேற்று நடை பெற்றது. வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.(த)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக வணிக மாணவர் மன்றம், பல்துறைசார்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு அண்மைக் கால வெளியீட்டு நூல்களையும் நாவல்களையும் மலிவு விலை யில் கொள்வனவு செய்வதற் கான சந்தர்ப்பத்தினை சகல ருக்கும் அளிக்கும் நோக் குடன், புத்தக கண்காட்சியி னையும் மலிவு விற்பனை யையும், நாளை செவ்வாய்க்கி ழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடாத்துகின் றது.

தமிழ் மக்களுடைய சொத் களில் முக்கியமானதாகக் கருதப்படும் நூல்கள். அண் மைக்கால இடப்பெயர்வுகள், இராணுவ நடவடிக்கைகள் மூலம் அழிந்து போயிருந்தன.

இப்பொக்கிசத்தினை மக் கள் மலிவு விலையில் கொள் வனவு செய்து பாதுகாக்க வேண் டிய சமூகப் பொறுப்பினை இதன் மூலம் நிறைவேற்ற கருதியே இது நடத்தப்படுகிறது.

அண்மைக்கால உள்நாட்டு வெளிநாட்டு சகல வெளியீட்டு நூல்களையும் மலிவு விற்பனையில் விற்பனை செய்வதற்கான அனுசரணையை கொழும்பு ஜெயாபுத்தக நிலையம் வழங்கியுள்ளது.

( க-15 )

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி உயர் தர வகுப்பு மாணவன் சஞ்சீவ னின் மூன்றாம் ஆண்டு நினை வஞ்சலி நிகழ்வுகள் யாழ். இந் துக் கல்லூரியில் இன்று காலை 8.15 மணிக்கு யாழ்மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் து.நிலக்ஷன் தலைமையில் நடை பெறவுள்ளது. (த)

## வவுனியாவில் சர்வமத பிரார்த்தனை

(வவுனியா)

சமாதானத்தை வலியுறுத்தி வவுனியா நகரிலுள்ள புத்த விகாரையில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை இடம் பெற்றது.

நேற்று மாலை 7.00 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வமதப் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண் டனர்.

அடுத்த கட்டமாக காலியில் சர்வமதப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளது. (த-13)

## சங்கானையில் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச வித் தியாலயத்தில் இன்று பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒன்று கூடலில் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து ஊரகதேசிய எழுச்சிப் பேரவை நிர்வாக குழு உறுப்பி னர்களை கலந்து கொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.(ந-5)

## அடையாள அட்டைகள் வழங்கல்

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை மூலம் யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இன்றிலிருந்து 05 தினங்க ளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் 1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து பின்பு இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றிருந்தவர்களுக்கும் அவர்களுக்குரிய பிரதேச செயலகத்தில் வைத்து அடையாள அட்டைகள் வழங்கப்படும்

இதேவேளை யாழ்.மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்று வெளிமாவட்டங்களிலிருந்து அடையாள அட்டைக்கு விண் ணப்பித்தவர்களுக்கும் இச் சேவையின் மூலம் தத்தமது பிரதேச செயலகத்தில் வைத்து அடையாளா அட்டைகள் வழங்கப்படவுள்ளன

மேலும் ஆட்பதிவுத்திணைக்களத்தின் இந்நடமாடும் சேவையின்போது சகல விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு துரிதகதியில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

---

**ஸ்ரீ.சு.கட்சி..**

விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்திருப்பதும்,ஜே.வி.பி.க்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

இதேவேளை,தமது தந்தையைக் கொலைசெய்தவர்களுடன் கூட்டுச் சேருவதா? என்று ஜனாதி பதியின் மகன் விமுக்தி குமார துங்கா தாயிடமும்,மாமன் அனுரா பண்டார நாயக்காவிடமும் கேள்வி எழுப்பியிருப்பதும் ஜே.வி.பியினருக்கு பலத்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளதால் கூட்டுச் சாத்தியமாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இத்தகையதொரு இழுபறி நிலையின் மத்தியில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய செயற் குழுக்கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடை பெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. கூட்டுத் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளது.

இம்மாதம் நடுப்பகுதியில் கைச்சாத்திடப்படவிருந்த கூட்டு ஒப்பந்தம் பல சிக்கல்களையும் மனக்கசப்புக்களையும் இரு சாராருக்கும் ஏற்படுத்தியிருப் பதால் ஒப்பந்தம் கைச்சாத்தி டுவது மேலும் தாமதம் ஆகலாம்,அல்லது ஒப்பந்தம் ஏற் படாது போகலாம் என அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. (ம)


**வேலையாள் தேவை**

**1.கணக்காளர்**

**2.விற்பனையாளர்**

ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்

தொடர்பு:யாழ் போன் சொப்
இல.10, நவீன சந்தை
மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.p-222-3817

(7257)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில

426(302) K.K.S. Rd ,
JAFFNA.
BLACK Rd CHANKANAI.

(7259)


## சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்

# முத்தையா முரளிதரன் முதலிடம் பெறுகிறார்

(கொழும்பு)

ஒருநாள் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் பந்து வீச்சு தரப்படுத்தலில்முத்தையா முரளிதரன் 893 புள்ளிகள் பெற்று முதலி டம் பெற்றுள்ளார்.

• இரண்டாவது இடத்தை 884 புள்ளிகளைப் பெற்ற அவுஸ்ரெலிய வீரர் ஜோன் மைக்ராவும் மூன்றாவது இடத்தை 883 புள்ளிகளை பெற்ற தென்னாபிரிக்க வீரர் டோன் ரெலக்கும் பெற்றுள்ளனர். (க-10)

## விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

இலங்கை மின்சாரசபையின் மேல்கொத்மலை மின்சாரத்திட்ட மீள்குடியேற்றஅலுவலர்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60வயதுக்குட்பட்ட தகைமையுடையோர் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பப்படிவத்தை திட்டப்பணிப் பாளர்,மேல்கொத்மலை மின் திட்டம் ,இலங்கை மின்சார சபை, 21/5 பாகொடை வீதி நுகேகொடை எனும் முகவரிக்கு சிபார்சு செய்யக் கூடிய உற வினரல்லாத இருவரின் தொலை பேசி இலக்கங்களுடன் அனுப் பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிகவிபரங்களை,01-817005. 01-821660 என்ற தொலைபன்னி இலக்கங்களூடாக பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-101)

## 5.5 வீதம் பொருளாதார வளர்ச்சி

இவ்வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சத வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. என மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் இவ்வளர்ச்சியில் சேவைகள் சம்பந்தப்பட்டதுறைகள், மற் றும் கைத்தொழில் துறையும் பெரும்பங்காற்றியுள்ளபோதி லும், விவசாயத்துறையில் சிறிய அளவு அபிவிருத்தியே ஏற்பட் டுள்ளது.

கடந்த மே மாதத்தை விட யூன் மாதத்தில் பணவீக்கம் குறைவடைந்துள்ளது.

நிதி முகாமைத்துவ பொறுப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் காரணமாவும் வட்டி வீதம் குறைப்பு மற்றும் சமாதான நடவடிக்கை காரணமாகவும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(தி)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார பணிப பாளர் சாந்தி திருநாவுக்கரசு வழங்கும் ''யோகமும் வாழ்வும்'' யோகாசனப் பயிற்சி பற்றிய கருத்தரங்கு இன்று மாலை 4.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (க-15)

---

**இஸ்ரேலுக்கான...**

கொண்டுள்ளனர்.இவர்கள் இருவருக்கும் அழைப்புக்கள் வெவ்வேறாக கிடைத்தபோதிலும் அவர்களது விஜயம் ஒரே சமயம் நிகழ்ந்தமை தற்செயலாக ஏற்பட்ட தொரு நிகழ்வாகும் என பாதுகாப்பு அமைச்சின் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

---

**அரசின்....**

இதனால் இலங்கையின் புலனாய்வு அமைப்புகளுக்கு இரகசியத் தகவல்களை வழங்கும் தகவல் மூலங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென் பதுடன் தேசியப் பாதுகாப்பு மற்றும் அரச நலன்களுக்கும் பாரதூரமான பாதக விளைவுகள் ஏற்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை,அரச புலனாய்வு நிறுவனங்கள் அத்தனையினதும் தலைமையிலுள்ளவரான குணரத்ன குறித்த அமெரிக்கர் இருக்கும் போது கூட்டத்தில் பங்குபற்றுபவர்களிடம் கேள்விகள் கேட்டதாகவும் சிலர் அங்கு பதில் கூறுவதற்குத் தயக்கம் காட்டுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.குறித்த அமெரிக்கர் தானும் நேரில் கேள்விகள் கேட்டு அப்புல னாய்வு அமைப்புத் தலைவர் களிடம் பதில்களைப் பெற்றுக் கொள்கிறார் என்றும் தெரி விக்கப்படுகின்றது.

புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பற்றியும் புலிகளின் தாக்குதல் தயாரிப்புக்கள் பற்றியும் கேட்டறியும் இந்த அமெரிக்கர் பற்றித் தமக்கு எதுவும் தெரி யாது என்று வாஷிங்டனில் உள்ள இலங்கைத்தூதரகம் தெரிவித்துள்ளது.அமெரிக்காவுடன் புலனாய்வு ஒத்து ழைப்புக்கான ஒப்பந்தங்கள் உண்டென்று மட்டும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(த)


**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.

**பத்திரிகை விநியோகத்தர்கள் தேவை**

துவிச்சக்கர வண்டி,மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் 15.07.2003 பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

- ஆளணி முகாமையாளர் -

வலம்புரி
இல.15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.